
Saturday மெயில்
A Fascinating Weekly Bulletin
සැටඩේ මේල්
11-09-2010
பக்கங்கள்: 24
விலை: 15/=



# ஐரோப்பியர்கள் கூடுதலாக பிள்ளைகளை பெறவேண்டும்

## வத்திக்கான் அதிகாரியின் வேண்டுகோள்






அடுத்த பக்கம் புரட்டுங்கள்

Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பாவில் உள்ள கிறிஸ்தவர்கள் கூடுதலாகப் பிள்ளைகளைப் பெற வேண்டும்.இல்லாவிட்டால் வெகுவிரைவில் அந்தக் கண்டம் இஸ்லாமியமயமாகிவிடுமென்று வத்திக்கான் அதிகாரியொருவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

ஐரோப்பியர்கள் மத்தியிலான பிறப்புவீத வீழ்ச்சியும் முஸ்லிம் குடியேற்றவாசிகளின் பெரும் எண்ணிக்கையிலான வருகையும் ஐரோப்பா இஸ்லாத்தினால் ஆக்கிரமிக்கப்படக்கூடிய சூழ்நிலைக்கு வழிவகுக்கக் கூடும் என்று வெளிநாடுகளில் உள்ள வத்திக்கான் தூதரங்களின் விவகாரங்களுக்குப் பொறுப்பான நிறுவனத்தின் உயரதிகாரிகளில் ஒருவரான இத்தாலியப் பாதிரியார் பீய்ரோ கெட்டோ கூறியதாக லண்டனின் டெயிலி ரெலிகிராவ் பத்திரிகை இவ்வாறு செய்தி வெளியிட்டிருக்கிறது.இந்தச் சவாலை ஐரோப்பியர்கள் மிகுந்த கவனத்துடன் எதிர்கொள்ள வேண்டும் என்றும் அவர் அறிவித்திருக்கிறார்.

குடிப்பரம்பலை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது இத்தாலியர்களின் சனத்தொகை வருடாந்தம் ஒரு இலட்சத்து 20 ஆயிரத்தினால் வீழ்ச்சி கண்டு வருகிறது.இதற்கு அடிப்படைக் காரணம் கருச்சிதைவுகளும் குடும்பங்கள் பிரிந்துவாழ்வதுமேயாகும்.ஆனால் இத்தாலியில் இருக்கக்கூடிய சட்டபூர்வமான குடியேற்றவாசிகளில் (2 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள்) அரைவாசிக்கும் அதிகமானவர்கள் முஸ்லிம்கள்.இவர்கள் மத்தியில் பிறப்பு வீதம் உயர்ந்த மட்டத்தில் இருக்கிறது.பத்திரிகைகளோ அல்லது தொலைகாட்சிகளோ இதைப் பற்றி எதுவும் பேசுவதில்லை.எவ்வாறெனினும் இதற்கான பதிலை மத மற்றும் கலாசாரத் துறைகளின் அடிப்படையிலும் இனத்துவத்தின் அடிப்படையிலுமே வழங்க முடியும் என்று அந்தப் பாதிரியார் குறிப்பிட்டிருக்கிறார்.

கிறிஸ்தவர்கள் தங்களது நம்பிக்கையின் பிரகாரம் வாழ்வதற்கு தவறுகிறார்கள்.இத்தகைய நிலைவரம் மதரீதியான வெற்றிடமொன்றை ஏற்படுத்துகிறது.இந்த வெற்றிடம் இஸ்லாத்தினால் நிரப்பப்படுகிறது.ஐரோப்பாவின் பெரும் பகுதியை விரைவில் இஸ்லாம் வெற்றிகொண்டு விடும் என்று பாதிரியுார் பிய்ரோ கெட்டோ கூறுகிறார்.



கார்டினல் மிலோஸ்லேவ் வில்க்

உண்மையிலேயே முன்னரையும் விட மக்கள் தற்போது கூடுதலான அளவுக்கு மதநம்பிக்கை குறைந்தவர்களாகவே மாறிக்கொண்டு வருகிறார்கள்.இதனால் ஏற்படுகின்ற வெற்றிடம் தவிர்க்க முடியாத வகையில் வேறு மத சக்திகளினாலும் வேறுமத நம்பிக்கைகளினாலும் நிரப்பப்படுகிறது.கிறிஸ்தவர்கள் தங்களை மதசார்பற்ற சக்திகளினால் பாதிக்கப்படக்கூடியவர்களாகவும் ஆக்கிக்கொள்கிறார்கள்.கிறிஸ்தவ ஐரோப்பாவில் மத வழிமுறைகள் குறைந்து கொண்டு வருகின்றது.அலட்சிய மனோபாவம் பரவுகிறது.கிறிஸ்தவமும் தேவாலயங்களும் தாக்குதல்களுக்கு இலக்காகின்றன.எமது நாட்டை ஒரு கிறிஸ்தவ நாடென்று நாம் கருதுவோமேயானால் நாம் கிறிஸ்தவ நடைமுறைகளுக்குத் திரும்ப வேண்டும்.வெற்றுத் தொட்டில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இதுவே நமக்கு உதவும் என்றும் பாதிரியார் கெட்டோ கூறியிருக்கிறார்.

சில மாதங்களுக்கு முன்னர் செக் நாட்டைச் சேர்ந்த கார்டினல் ஒருவரும் ஐரோப்பா இஸ்லாமிய மயமாவதற்கு கத்தோலிக்கர்களைக் குறை கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பியர்கள் தங்களது வாழ்வின் கிறிஸ்தவ உள்ளடக்கத்தை தொடர்ச்சியாக வெறுமையாக்கி வருவதன் விளைவாக தோற்றுவிக்கப்படும் ஆன்மிக இடைவெளியை நிரப்பக்கூடிய வலுவான நிலையில் முஸ்லிம்கள் இருக்கிறார்கள் என்று கார்டினல் மிலோஸ்லேவ் வில்க் கூறியிருந்தார்.



தங்களுக்கு முன்னால் தோன்றி வருகின்ற அச்சுறுத்தலை உணர்ந்து கிறிஸ்தவர்கள் விழித்தெழாத பட்சத்தில் சமூகத்தில் தங்களது ஸ்தானத்தை நிலைநிறுத்துவதில் போதிய பலத்தைக் கொண்டிராதவர்களாக இவர்கள் மாறி வருவதை அவர்கள் ஒருநாள் உணர்வார்கள் என்றும் அந்த கார்டினல் கூறியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுபவம் புதுமை இவரிடம் கேட்டோம்

# 'எதிரணி எம்.பி.க்கள் இன்று வெறும் பொம்மைகளே'



பாராளுமன்ற உறுப்பினர் (எம்.பி.)என்றதும் எதையும் செய்துவிட முடியுமென மக்கள் நினைக்கின்ற போதிலும் எதிரணி எம்.பி.க்கள் இன்று வெறும் பொம்மைகளாகவே இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் களுத்துறை மாவட்டத்திலிருந்து தெரிவான புதிய எம்.பி.யான பாலித தேவப்பெரும தெரிவித்தார்.

Saturday மெயிலுக்கு வழங்கிய பேட்டியிலேயே தேவப்பெரும எம்.பி.இவ்வாறு கூறினார்.அவரது பேட்டியின் விபரம் வருமாறு;

**கேள்வி:உங்களது கல்வி,குடும்பப் பின்னணி பற்றி?**

**பதில்:**மதுகம ஆனந்த கல்லூரியில் நான் எனது பாடசாலை கல்வியை மேற்கொண்டேன்.அதன்பின்னர் 5 வருடங்கள் கடற்படையில் பணியாற்றினேன்.இதனையடுத்து இடதுசாரி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தேன்.2002 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முதற்தடவையாகப் போட்டியிட்டு வெற்றிபெற்று மதுகம பிரதேச சபையின் தலைவராகவும் தெரிவானேன்.2004 ஆம் ஆண்டு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு ஐ.தே.க.சார்பாக களுத்துறை மாவட்டத்தில் 2 ஆம் இடத்தை பெற்று மேல் மாகாண சபைக்கு தெரிவானேன். அதன் பின்னர் மாகாண சபையிலிருந்து விலகி மீண்டும் 2006 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்டு மதுகம பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரானேன்.எனினும் 2006 ஆம் ஆண்டில் கட்சித் தலைமைத்துவத்தினால் மீண்டும் மாகாண சபைக்கு நியமிக்கப்பட்டேன்.இதனையடுத்து 2009 ஆம் ஆண்டு மேல்மாகாண சபைத் தேர்தலிலும் வெற்றிபெற்றேன்.இதனையடுத்தே ஜனாதிபதி தேர்தல் காலத்தில் கடந்த டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி என் மீது போலியான குற்றச்சாட்டுகளை சுமத்தி கைது செய்தனர்.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் சிறைக்குள் இருந்துகொண்டே போட்டியிட்டு ஐ.தே.க.சார்பில் களுத்துறை மாவட்டத்தின் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் தெரிவாகியுள்ளேன்.பிரசார நடவடிக்கைகளை எனது மனைவியே பொறுப்பாக இருந்து கவனித்து கொண்டார். எனக்கு இரு பிள்ளைகள் இருக்கின்றனர்.

**கேள்வி:அரசியல் பிரவேசத்துக்கான காரணம் என்ன?**

**பதில்:**அரசியல் பிரவேசம் ஏதேச்சையாக நடந்ததொன்றாகும்.இடதுசாரி அரசியலின் நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது மக்கள் கூறும் பிரச்சினைகளை அறிந்திருக்கின்றேன்.மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றவே நான் அரசியலுக்குள் வந்தேன்.நாடு சுதந்திரமடைந்த பின்னர் தோட்ட மக்களுக்கென யாரும் எதுவும் செய்யவில்லை.எனது வெற்றிக்கு தோட்டப்புற மக்களே முக்கிய காரணம்.தமிழ்,முஸ்லிம் மக்களில் அதிகமானோர் எனக்கு வாக்களித்துள்ளனர்.அவர்களுக்காக நான் சேவை செய்ய கடமைப்பட்டுள்ளேன்.

**கேள்வி:அரசியலில் உங்களது நோக்கம்?**

**பதில்:**இன்றும் தீர்க்கப்படாத மக்களின் பல பிரச்சினைகள் இருக்கின்றன.போக்குவரத்து,மருத்துவம்,கல்வி போன்ற துறைகளில் இன்றும் பல குறைபாடுகள்,பிரச்சினைகள் நிலவுகின்றன.தோட்டப்புற மக்கள் அடிப்படை வசதிகளின்றி பெரும் சிரமங்களை அனுபவிக்கின்றனர்.இந்த பிரச்சினைகளுக்கு திருப்திகரமான தீர்வை பெற்றுக் கொடுப்பதே எனது நோக்கம்.

**கேள்வி:முதலாவது பாராளுமன்ற அமர்வின் போதான அனுபவம் எப்படியிருந்தது?**

**பதில்:**நான் எம்.பி.யாக தெரிவாகிய பின்னர் நடைபெற்ற முதலாவது பாராளுமன்ற அமர்வில் எனக்கு கலந்து கொள்ள கிடைக்கவில்லை.சிறைச்சாலையில் இருந்து என்னை அழைத்து வரவில்லை.பின்னர் 2ஆவது அமர்விற்கு சென்ற போது நான் இதுபற்றி சிறப்புரிமை பிரச்சினையும் கிளப்பியிருந்தேன். இன்று பாராளுமன்றம் கேலி கூத்தாகியுள்ளது.ஆளுந்தரப்பு எம்.பி.க்கள் தங்களது பலத்தை பாவித்து ஏனைய உறுப்பினர்களை பேசுவதற்குக் கூட இடமளிப்பதில்லை.இவர்களால் பாராளுமன்றத்தின் உயரிய தன்மை பேணப்படுவதில்லை.பாராளுமன்றத்தின் மூலம் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியுமென்ற நம்பிக்கை எனக்கில்லை.இந்த நிலைமை மாற வேண்டும்.பாராளுமன்ற நடவடிக்கைகளை பாடசாலை மாணவர்களும் பார்வையிட வருவதால் அங்கு நடத்தைகளில் ஒழுங்குகள் பேணப்பட வேண்டும்.

**கேள்வி:சிறையில் இருந்து பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொண்டு வந்த நிலையில் தற்போது விடுதலையாகிவிட்டதன் பின்னர் உங்களது உணர்வுகள் பற்றி?**

**பதில்:**விசேடமான வித்தியாசங்கள் எதுவுமில்லை.எம்.பி.என்றால் எதையும் செய்துவிட முடியுமென மக்கள் நினைக்கின்றனர்.அவ்வாறு மக்கள் பல்வேறு பிரச்சினைகளையும் கொண்டு வருகின்றனர்.எனினும் எதிரணி எம்.பி.க்கள் இன்று வெறும் பொம்மைகளாக்கப்பட்டுள்ளனர்.மக்கள் எம்மை உயர்ஸ்தானத்தில் வைத்துள்ளனர்.எனினும் பாராளுமன்றத்தின் மூலம் மக்களின் பிரச்சினைகளை பேசித் தீர்க்க முடியுமா என்பது சந்தேகமே.


**கேள்வி:மக்களுக்கான உங்கள் செய்தி?**

**பதில்:**எனது வெற்றிக்கு தோட்டப்புற மக்களே உறுதுணையாக இருந்தனர்.அவர்களுக்காக நான் சேவை செய்ய கடமைப்பட்டுள்ளேன்.மஹிந்த சிந்தனை மூலம் உறுதியளித்த விடயங்களைவிடுத்து அரசு வேறு வழியில் சென்று கொண்டிருக்கிறது.மக்களின் பிரச்சினைகளை தீர்க்காமல் அரசியலமைப்பை திருத்தி ஆட்சி அதிகாரத்தை தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ள செயற்பட்டுள்ளனர்.எனவே இவற்றுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்து ஐ.தே.க.வை ஆட்சிக்குக் கொண்டு வர பாடுபட வேண்டும்.ஐ.தே.க.என்பது ஒரு போதும் மக்கள் மீது குரோதம் கொள்ளாத கட்சியேயாகும்.

டிட்டோகுகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது ஒரு முயல்கணக்கு



**ஆசிரியை:** நான் உங்களிடம் முதலில் இரு முயல்களைத் தருவதாக வைத்துக்கொள்ளுங்கள். மீண்டும் இரு முயல்களைத் தருகிறேன். பிறகும் இரு முயல்களைத் தருகிறேன். இப்போது உங்களிடம் எத்தனை முயல்கள் இருக்கின்றன என்று கூறுங்கள்.

மாலா என்ற மாணவி எழுந்து ஏழு முயல்கள் என்று பதில் கூறினாள்.

**ஆசிரியை:** இல்லை, கவனமாகக் கேளுங்கள். முதலில் இரு முயல்கள், அடுத்து இரு முயல்கள், இறுதியாகவும் இரு முயல்கள் தருகிறேன் என்றால் எத்தனை முயல்கள் உங்களிடம் இருக்கும்?

**மாலா:** ஏழுதான் ரீச்சர்.

**ஆசிரியை:** மீண்டும் நன்றாக யோசித்துப் பதில் சொல் மாலா.

**மாலா:** நான் நன்றாக யோசித்துத்தான் சொல்கிறேன் ரீச்சர். ஏழேயேழு முயல்கள் தான்.

**ஆசிரியை:** நிதானமாக நான் சொல்வதைக் கேளுங்கள். முதலில் உங்களுக்கு இரு ஆப்பிள் பழங்களைத் தருகிறேன். அடுத்து இரு ஆப்பிள் பழங்களைத் தருகிறேன். இறுதியாகவும் இரு ஆப்பிள் பழங்கள் எல்லாமாக எத்தனை ஆப்பிள் பழங்கள் உங்களிடம் கூறுங்கள் பார்க்கலாம்.


**மாலா:** ஆறு பழங்கள்.

**ஆசிரியை:** நல்லது சரியாகக் கூறிவிட்டாய் மாலா. அப்போது நான் இரண்டு இரண்டாக மூன்று தடவைகள் கூறுகின்ற முயல்களின் எண்ணிக்கை மாத்திரம் எவ்வாறு ஏழாக முடியும்?

**மாலா:** எனது வீட்டில் ஏற்கனவே ஒரு முயல் இருக்கிறதல்லவா ரீச்சர்.

# யோகாவின் பயன்





ஒரு இளைஞனின் காதலி கைவிரல் நகங்களைக் கடிக்கும் பழக்கமுடையவளாக இருந்தாள்.அந்தப் பழக்கத்தைக் கைவிடச் செய்வதற்கு அவளுக்கு யோகா பயிற்சியைக் கொடுத்தால் நல்லது என்று இளைஞனிடம் நண்பர்கள் கூறினார்கள்.

இளைஞனும் காதலிக்கு யோகா பயிற்சி கொடுப்பதற்கு உடற்பயிற்சி ஆசிரியர் ஒருவரை ஒழுங்கு செய்து கொடுத்தான்.

சிலவாரங்கள் கழித்து இளைஞன் காதலியிடம் கேட்டான்.யோகா பயிற்சி உனது கைவிரல் நகங்களைக் கடிக்கும் பழக்கத்தில் ஏதாவது மாறுதல்களைக் கொண்டு வந்திருக்கின்றதா என்று.

அவளும் தனது கைகளைக் காட்டிப் பாருங்கள் எனது நகங்கள் நன்றாக வளர்ந்திருக்கின்றன என்று கூறினாள்.

அப்போ நீ கைவிரல் நகங்களைக் கடிப்பதை நிறுத்தி விட்டாய் என்று கூறுகிறாய் என்று இளைஞன் கேட்டான்.

எனக்கு இப்பொழுது கைவிரல் நகங்களைக் கடிப்பதை விட யோகா பயிற்சியின் பயனாக கால்விரல் நகங்களையே இலகுவாக கடிக்கக் கூடியதாக இருக்கிறதல்லவா? என்று பதில் சொன்னாள் அந்த அன்புக் காதலி.

# யோகா தந்த மாற்றம்



**யோகா கலை பயிற்றுவிக்கும் ஆசிரியர்:** யோகா பயிற்சி உங்கள் கணவரின் குடிப்பழக்கத்தில் ஏதாவது நல்ல மாறுதல்களைக் கொண்டு வந்திருக்கிறதா?

**பெண்மணி:** ஆமாம். சேர். மிகவும் விந்தையான மாற்றம். தலை கீழாக நின்று கொண்டே ஒரு முழுப் போத்தல் சாராயத்தையும் மிகவும் இலேசாக குடித்துவிடுகிறார்.

# உலகம் உருண்டையா?



ஜோனிடம் ஆசிரியர் கேட்டார் உலகம் உருண்டையானது என்று எவ்வாறு நிரூபிப்பாய் என்று.

என்னால் முடியாது. ஏனென்றால் நான் உலகம் உருண்டை என்று உங்களுக்கு ஒரு போதும் கூறவில்லை என்று ஜோனிடமிருந்து பதில் வந்தது.

# நல்ல செய்தியும் கெட்ட செய்தியும்



ஒரு நபருடன் டாக்டர் ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

**டாக்டர்:** உங்களுக்கு கூறுவதற்கு என்னிடம் நல்லதொரு செய்தியும் கெட்டதொரு செய்தியும் இருக்கிறது.

**நபர்:** அப்படியா எனக்கு முதலில் நல்ல செய்தியைக் கூறுங்கள்.

**டாக்டர்:** நீங்கள் இன்னும் 24 மணித்தியாலங்கள் தான் உயிர் வாழுவீர்கள் என்பதே அந்த நல்ல செய்தி.

**நபர்:** அது நல்ல செய்தி, சரி, கெட்ட செய்தி எது?

**டாக்டர்:** கெட்ட செய்தி என்னவென்றால், நேற்றைய தினமே உங்களுக்கு தொலைபேசியில் இதைச் சொல்லியிருக்க வேண்டும் ஆனால் மறந்துவிட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை 'துஷ்பிரயோகங்கள்'

கடந்த சில வாரங்களாக பத்திரிகைகளை புரட்டினால் மாணவி மீது வல்லுறவு ஆசிரியர் கைது 'மாணவனுடன் அதிபர் தகாதநடத்தை, 'மாணவி மீது அதிபர் துஷ்பிரயேகம்' மாணவர்களுக்கு ஆபாசப் படம் காட்டிய ஆசிரியர்' என்பன போன்ற அதிர்ச்சிகரமான செய்திகளை அதிகமாகக் காணக்கூடியதாகவுள்ளது.

தமது செல்வாக்கு, பதவிநிலை, மாணவர்களின் தேவைகளை தமக்கு சாதகமாக பயன்படுத்தும் சில அதிபர், ஆசிரியர்களே மாணவர்களின் எதிர்காலத்தை சூறையாடும் கீழ்த்தரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் சிலர் கைது செய்யப்பட்டாலும் தமது செல்வாக்கை பயன்படுத்தி வெளியே வந்துவிடுவது தான் இன்னும் கொடுமையானது.

பிரத்தியேக வகுப்புக்கள், தனியார் வகுப்புக்கள், என மாணவர்களை கவரும் சிலர் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமது காம வகுப்புக்களை நடத்துகின்றனர். அண்மையில் ஒரு பாடசாலையை சேர்ந்த சில மாணவிகளை (அனைவரும் சிறுமிகள்) ஆசிரியரொருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக செய்திகள் வெளிவந்திருந்தன.



கல்விக் கூடங்கள் இன்று கலவிக் கூடங்களாக மாறி வருவதால் பெற்றோர்கள் தான் பெரும் அச்சம் அடைந்துள்ளனர். காலையில் பாடசாலை செல்லும் தமது பிள்ளை மாலையில் ஒழுங்காக வருகின்றதா என்பதை கண்காணிக்க வேண்டிய சூழ்நிலைக்கு பெற்றோர் தள்ளப்பட்டுள்ளனர்.

இதுவரை காலமும் தென் பகுதியிலே இவ்வாறான சம்பவங்கள் அதிகளவில் இடம் பெற்று வந்தன. தற்போது இதுபோன்ற சம்பவங்கள் கிழக்கு மாகாணத்திலும் அதிகரித்துள்ளது. இவ்வாறான பாலியல் துஷ்பிரயோக சம்பவங்களால் கூடுதலாக சிறுமிகளும் சிறுவர்களுமே பாதிக்கப்படுகின்றனர். இவர்களை சுலபமாக ஏமாற்றி விடலாம் என்பதாலேயே சில காமுக ஆசிரியர்கள் சிறுமிகளை தமது இச்சைக்கு பயன்படுத்துகின்றனர்.

மாணவர்கள் தனது சந்தேகங்களை தெளிவுபடுத்திக் கொள்ளவும் தனது அறிவுத்

திறனை மேம்படுத்திக் கொள்ளவும் கல்வியாளர்கள் மீது காட்டும் அன்பினை, [illegible]க்கேடான முறைகளில் பிரயோகிக்கும் நிலையே தற்போது நிலவுகிறது. இதனால்தான் பாலியல் துஷ்பிரயோகங்கள் நாளுக்குநாள் அதிகரிக்கின்றன.

தனக்கு கற்றுத்தந்த குருவுக்கு சிரம் தாழ்த்தக்கூடிய நிலையில் அன்றைய மாணவச் சமுதாயம் இருந்ததுடன், பாடசாலைப் படிப்புக்கும் மரியாதையிருந்தது. ஆனால் இவற்றையெல்லாம் சீரழிக்கக்கூடிய நிலையில் இன்றைய சில கல்வியாளர்கள், ஆசிரியர்கள் காணப்படுகின்றனர்.

அண்மைக் காலமாக கிழக்கு மாகாணத்திலுள்ள சில பாடசாலைகளில் சில ஆசிரியர்களினாலும், அதிபர்களினாலும் மாணவர்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவங்கள் இடம் பெற்றிருந்தன.

கிழக்கு மாகாணத்திலே பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரித்து வருவதாகவும், கிழக்கு மாகாண கல்வியமைச்சர் பணியாளர்கள் நால்வரை இடைநிறுத்தியுள்ளதாகவும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

அண்மையிலும் கூட மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர், [illegible] என மூவர் இடைநிறுத்தப்பட்டிருந்தாகவும் இங்கு பாலியல் துஷ்பிரயோகம், நிதிமோசடி, ஒழுக்க மீறல் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கிழக்குமாகாண பாடசாலைகளில் அதிகரித்துள்ள துஷ்பிரயோகங்கள் தொடர்பாக கிழக்கு மாகாணத்தின் கல்முனை கல்வி வலயப் பணிப்பாளர் கூறுகையில்;

''சிறுவர் துஷ்பிரயோகங்களுகக்கு எதிராக எமது நாட்டில் பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதும் துஷ்பிரயோகம், சுரண்டல்களினால் பாதிப்படைவோரின் எண்ணிக்கையில் பெருமளவு வீழ்ச்சி காணப்படவில்லை.

இந்தவருடம் கல்முனை வடக்கிலும் இவ்வாறான சம்பவம் இடம் பெற்றுள்ளது. பாடசாலை அதிபரொருவரே கல்வி கற்கின்ற மாணவர் ஒருவருடன் தகாத முறையில் நடந்துள்ளார்.

இது தொடர்பாக எமக்கு கிடைத்த தகவலையடுத்து, அவ்வதிபரை எமது கல்வி வலயத்திற்கு வெளியில் இடமாற்றம் செய்துள்ளோம்.

மேலும் கல்முனை கல்வி வலயத்தில் [illegible] ஒழுக்கக் கேடான செயற்பாடுகள் இடம் பெறாமலிருப்பதற்காக கல்வித் திணைக்கள அதிகாரிகள், அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கு விசேட கருத்தரங்குகளை நடத்தி வருவதுடன், துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்தோம்.

சில ஆசிரியர், கல்வியாளர்களின் ஒழுக்கக் குறைவும், மாணவர்களுக்கு தொலைக்காட்சி, இணையத்தில் ஏற்பட்டுள்ள மோகமுமே இவ்வாறான சீர்கேடுகள் அதிகரிப்பதற்கு காரணம்'' எனவும் அவர் மேலும் கூறினார்

இதேபோன்று கிழக்கு மாகாணத்திலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் துஷ்பிரயோகசம்பவங்கள் அதிகரித்துள்ளதாக ஊடகங்கள் அறிக்கையிடுகின்றன. இதன்படி, மட்டக்களப்பு மாவட்ட பாடசாலையொன்றில் கற்பிக்கும் ஆசிரியரொருவர் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், சம்மாந்துறை கல்வி வலயத்திற்குற்பட்ட வளத்தாப்பிட்டிய, உட்பட இன்னுமொரு பகுதியைச் சேர்ந்த பாடசாலை, நாவிதன்வெளி பிரதேச பாடசலைகளில் தொடர்ந்தும் சில அதிபர், ஆசிரியர்களால் மாணவர்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்குள்ளாகி வருகின்றனர் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கிழக்கு மாகாணத்தின் கல்வி அறிவு வீதம் குறைந்தும் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்துக் கொண்டும் செல்கின்றதாகவும். இச்சம்பவங்கள் வீடுகளிலும் பொது இடங்களிலும், பாடசாலை, தனியார் கல்விக் கூடங்களிலும் இடம்பெறுவதாகவும் இதனால் பாரிய கலாசார சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் மனித உரிமைதாபனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

கல்விக்கூடங்களில் பணிபுரியும் ஆசிரியர்களினதும் அதிபர்களினதும் ஒழுங்கீனம் பெற்றோர்களை அதிர்ச்சியடையவைத்துள்ளது.

எழுத்தறிவித்தவன் இறைவனுக்கு சமம் என்று கருதப்படும் நிலை தறபோது மாறிவிட்டது. இதற்கு அடிப்படைக் காரணம் பாடசாலைகளில் மாணவர்களுக்கு ஒழுக்கத்தைப் போதிக்கவே ஆசிரியர்கள் என்ற நிலைமை மாறி வருகின்றமையாகும். இந்நிலை எதிர்கால சந்ததியினருக்கு பாதிப்பையே உருவாக்கும்.

எனவே இவ்வாறான தண்டனைக்குரிய செயற்பாடுகளில் ஈடுபடும் அதிபர், ஆசிரியர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமே மாணவர்களின் எதிர்காலத்தை பாதுகாக்க முடியும்.

**எச்.ஹுஸ்னா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரித்துவிட்ட தன்னம்பிக்கைத் தளர்வுகளும் அதிகரிக்கப்பட வேண்டிய ஆற்றுப்படுத்தலும்



தற்போது தற்கொலைகள் தமக்குரிய புதிய வேகத்தில் நகர்கின்றன. இதற்கான காரணங்களை கருதும் போது எதிர்மறை விமர்சனங்கள் எல்லை தாண்டிய நிலையில் எமது சமூகத்தில் நொந்துபோன மனிதர் மீது பழிப்புகளை மட்டுமே படையல்களாகப் படைக்கும் எம்மனிதர் கூட்டங்களால் நொந்துபோன மனிதர் மேலும் வெந்து போவதும் விரக்தி நிலை அதனூடு வன்முறை அல்லது தற்கொலை நோக்கி நகர்வதும் தன் முனைப்புச் சிந்தனைகள் முளையிட முடியாத நிலையுமே காரணமாகின்றன.

மாணவர்கள் மற்றும் மக்களிடையே வாசிப்புத் திறன் குன்றிவிட்டதுடன் கேள்விகளை சுமந்து செல்பவனே விடைகளையும் சுமந்து சென்று ஆலோசனை கேட்க வேண்டிய காலம் என்றால் சொல்ல வேண்டுமா? இன்னும் இன்னும் இவை தாண்டிப் போன நிலையில் சாதிப்பது தான் வாழ்வு என்ற எண்ணம். போட்டிப் பரீட்சைகளை இலக்காகக் கொண்டு உருவான சமூகம் சாதிப்பதுதான் பெருமை என்ற எண்ணத்துடன் மழலைகள் முதுகில் கூட மன உளைச்சலை மட்டும் அடக்கிச் செல்வதால் தொடர்கிற நிஜம்.

இவ்வாறே சாதிப்பது மட்டுமல்ல சோதித்துக் கொண்டு விடுபடுவதும் வாழ்வே என்று உணராத நிலை அதுதாண்டி வீழாமல் இருப்பதில் இல்லை. மகத்துவம் வீழ்ந்த பின்னும் மீள்வதில்தான் உண்டென உணரும் நிலை உருவாகும் வரை தொடரும் நெருக்கீடு நெருக்கீட்டின் ஆர்முடுகல் இயக்கத்தில் கதியிழக்கும் சமூகத்திற்கு ஆற்றுப்படுத்தலின் ஆபத்தில்லாத தன்மையை ஆற்றுப்படுத்தலின் நம்பகத்தன்மை இரகசியங்கள் பேணப்படல் போன்றன பற்றி உணரப்படல் வேண்டும்.

ஆற்றுப்படுத்தல் என்பது எம் சமூகத்தில் மருந்துகளூடு தான் நிகழும் மருத்துவம் என்ற தவறான மனநிலையும் தொடர்ந்து செல்லும் தொடர் நிலைகளாக ஆற்றுப்படுத்தல் அது சமூக கட்டமைப்பின் பல சம்பிரதாய நிகழ்வுகளின் அதாவது, வைபவங்களின் உள்ளத்தை உள்ளத்தால் தேற்றும் உறவுகளின் தேற்றல் என்று உணராத நிலையில் மருந்துகள் தொடர்பான கசப்புணர்வு இவற்றால் அந்நியப்பட்டு விட்ட ஆற்றுப்படுத்தல் மீண்டும் உயிர்பெற வேண்டும்.

அனர்த்தங்களில் உடல் காயங்கள் ஏற்படுவது போன்று அல்லாது உள்காயங்கள் ஏற்படுவது மிக அதிகமாகும். உளப்பேரதிர்வானது ஏற்பட்டிருப்பினும் பலர் வெளிப்படையாக உணர முடியாத நிலையிலேயே இருப்பர். இதனால், இவர்கள் மெய்ப்பாட்டு நோய்களாகவும் மனச்சோர்வு போன்று பல வகையில் வெளிப்படுத்துவர். இவற்றில் மனச் சோர்வானது துயரங்களை எதிர்கொள்வதால் எதிர்மறையான எண்ணங்கள் ஏற்படுவதும் அத்துடன், அவை மீள மீள வந்து ஆழ அமிழ்த்தி மனிதனை மூழ்கடிக்கக் கூடியவையுமாகும்.

இதன் அறிகுறிகள்;

அதிக கவலை, மகிழ்ச்சியான விடயங்களில் ஆர்வமின்மை, மகிழ்ச்சி கிடைப்பினும் அனுபவிக்க முடியாமை, விரக்தி, கண்ணீர் சிந்துதல், அழுதல், [illegible] குற்ற உணர்வு, தன்னகத் துறவு, உணவில் ஆர்வமின்மை, அதிக களைப்பு, நித்திரை இன்மை, நித்திரைக் குழப்பம், மனதை ஒருமுகப்படுத்த முடியாமை, தன்னம்பிக்கையின்மை, தற்கொலை எண்ணம் எனப் பலவாறு கூறினாலும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது தன்னம்பிக்கை இழத்தலும் அதைத் தொடர்ந்து தற்கொலையூடு பயணம் செய்வதும் என்று அமைகிறது.

மனச் சோர்விற்கான சிகிச்சை முறையை நோக்கும் போது ஆற்றுப்படுத்தல் மற்றும் பௌதீக முறைகள் என வேறுபடுகின்றது.

பௌதீக முறையில் மருந்து மாத்திரைகள் தொடர்பானதாகவும் மென் மின் அதிர்வு முறை என்பனவும் அடங்குகின்றன.

மருந்து மாத்திரை கொண்டு சிகிச்சை என்பது அண்மைக்கால ஆய்வுக்கற்கைகள் கொண்டு நோக்கும் போது தெளிவான நன்மை பயப்பதாகவும் இல்லை.

அண்மைக் காலத்தில் British Medical Journal BMJ சற்று புதிய தகவல்களையும் தருகின்றது. இதில் 372 சோதனைகளில் 100,000 பேர் உட்படுத்தப்பட்ட போது மனச்சோர்வுக்கான மருந்து மாத்திரைகளினால் 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தற்கொலை எண்ணம் குறைவடைகிறது எனவும் இளவயதினில் அவை தற்கொலை எண்ணத்தைக் கூட்டுவதாகவும் கணிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான மருந்தியல் முறைசார் சிகிச்சைக்கான எதிர்ப்புக் கருத்துகள் ஆய்வுக்களை நிரப்பிய வண்ணமே உள்ளன.

இத்தோடு தற்போது தற்கொலைகள் அதிகரித்து ஆர்முடுகல் வேகத்தில் நகர்கின்றன.

போரின் பாதிப்புகளைத் தொடர்ந்து ஆற்றுப்படுத்தல் என்பது மிகவும் சிறப்பாக அமைய வேண்டிய தேவையைக் கொண்டுள்ளது. இதைவிட ஆற்றுப்படுத்தல் போதிய இடத்தை மக்கள் மனதில் பிடிக்க முடியாமை கருத வேண்டியதொன்றாகும். [ஆற்றுப்படுத்துவோர் கையாளும் முறைகள் பெரும்பாலும் மக்களை அந்நியப்பட்டு காணப்படுவதும் கருதத்தக்கதாவேயுள்ளது.]

அத்துடன், ஆற்றுப்படுத்துகையானது புறக்கணிக்கப்படுகின்றது. கணிக்கப்பட்டது ஒன்றாகவேயுள்ளது. ஊக்கம் குன்றியதாகக் காணப்படுகின்றது. சில வருடங்களுக்கு முன் சிறப்பாக வெளிநாட்டு நிபுணர்கள் வருகையுடன் பேராசிரியர் தயா.சோமசுந்தரம் மிகவும் பெரியதொரு சேவையைச் செய்து வந்தது மெச்சத்தக்கதாகும்.

இந்நிலையில், ஆற்றுப்படுத்தலின் தேவை அதிகரிக்கப்பட்ட நிலையில் ஆற்றுப்படுத்தல் நிறுவனங்கள் முடங்கிக் கிடப்பதை நோக்கினால் கவலைக்குரியதாகவேயுள்ளது.

எனவே, வளர்க்க வேண்டிய தேவை பத்திரிகைகள் உளவளத்துணை நிலையங்களையே சாரும்.

டாக்டர்
வெ.நாகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எழுபதிலும் ஆசை வரும்



எழுபது வயதிலும் கூட செக்ஸ் உணர்வுகள் வற்றாது. அந்த வயதிலும் சிறப்பாகச் செயற்படும் என அமெரிக்க ஆய்வு ஒன்று கூறுகிறது.

அமெரிக்கர்களிடையே நடத்தப்பட்ட இந்த ஆய்வில் 60 களில் இருப்போரில் பெரும்பாலானோர்களுக்கு 70 வயதுகளின் தொடக்கத்தில் இருப்போரில் பாதிப்பேரும் நல்ல செக்ஸ் உணர்வுகளில் ஈடுபடுவது தெரியவந்துள்ளது.

அதேசமயம், வயதானவர்களில் பலருக்கு பல்வேறு செக்ஸ் ரீதியான பிரச்சினைகள் ஏற்படுவதும் தெரியவந்துள்ளது. ஆசை குறைவது, ஆணுறுப்பு எழுச்சியின்மை உள்ளிட்டவை அதில் சில.

இந்த ஆய்வுக்காக 57 முதல் 85 வயது வரையிலான 3 ஆயிரம் அமெரிக்கர்களிடம் ஆய்வு நடந்தது. தங்களது செக்ஸ் நடவடிக்கைகள் குறித்த தகவல்களைத் தருமாறு இவர்களிடம் கோரப்பட்டது.

57 வயதைக் கடந்த ஆண்களை விட பெண்களுக்கு செக்ஸ் ஆசை குறைவாகவுள்ளது தெரியவந்தது. மேலும் துணை இல்லாமல் வாழக்கூடிய வகையிலான மனப்பக்குவம் கொண்டவர்களாக இந்த வயதுடைய பெண்கள் உள்ளனர். இனியும் தங்களுக்கு செக்ஸ் ஆசை தேவையில்லை என்பது இவர்களது கருத்து.

அதேசமயம், இந்த வயதுடைய ஆண்களுக்கு செக்ஸ் ஆர்வம் அதிகமாக உள்ளதாம் என்கிறார் ஆய்வை மேற்கொண்ட குழுவின் தலைவரான ரொபர்ட் பட்லர்.

இந்த ஆய்வின் மூலம் கிடைத்த பொதுவான தகவல்.

57 முதல் 64 வயது வரையில் உள்ளவர்களில் 84 சதவீதம் பேர் நல்ல உடல்நலம் மற்றும் செக்ஸ் நலத்துடன் உள்ளனர்.

75 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களில் இது 38 சதவீதமாகவுள்ளது.

70 வயதுகளில் இருப்பவர்களில் 3 இல் 2 பங்கு பேர் மாதம் இருமுறை செக்ஸ் உறவு வைத்துக்கொள்கின்றனராம். 80 வயதுகளில் இருப்போரும் கூட மாதம் ஒருமுறை உறவு வைத்துக் கொள்கின்றனராம்.

70 முதல் 80 வயது கொண்ட பெண்களுக்கு செக்ஸ் ஆர்வம் பெரிய அளவில் இல்லை. ஆனால், இந்த வயதுடைய தாத்தாக்களுக்கு செக்ஸ் ஆசை சிறப்பாகவுள்ளதாம். பெண்களில் 43 சதவீதம் பேர் ஆசை இல்லாமல் உள்ளனர். 39 சதவீத பெண்களுக்கு பெண்ணுறுப்பு வறட்சிப் பிரச்சினை உள்ளது. 37 சதவீதம் ஆண்களுக்கு உறுப்பு எழுச்சியின்மை குறைபாடு காணப்படுகிறது. இந்த ஆய்வின் பொதுவான முடிவு வயதானாலும் செக்ஸ் ஆசையில் பெரிய அளவில் குறையவில்லை என்பதே.

# 106 வயதில் ஒரு கன்னி



இங்கிலாந்தில் ஒரு பெண்மணிக்கு 106 வயதாகிறது. ஆனால், இதுவரை அவர் கன்னிப் பெண்ணாகவே இருக்கிறாராம். யாரிடமிருந்தும் ஒரு முத்தம் கூடப் பெற்றதில்லையாம் இந்தப் பெண்.

இஸா பிளித் என்ற அந்த 106 வயதுப் பெண்மணி நல்ல உடல் ஆரோக்கியத்துடனும் திடமான மனதுடனும் அனைவரையும் ஆச்சரியப்படுத்துகிறார்.

இப்படித் திருமணம் செய்யாமல் [illegible] கொடுக்காமல் வாழ்ந்து வருவதே தனது நீண்ட கால ஆயுளின் இரகசியம் என்று படு தெளிவாகப் பேசுகிறார்.

இது குறித்து அவர் கூறுகையில்;

என் இளமைப் பருவத்தில் என்னிடம் யாரும் நெருங்கியதில்லை. நானும் யாரையும் அனுமதித்ததில்லை. ஏன், யாரும் ஒரு முத்தம் கொடுக்கக்கூட நான் அனுமதித்ததில்லை. எனக்கு காதல் தேவை, செக்ஸ் தேவை என நான் ஒருபோதும் நினைத்ததில்லை. அந்த உணர்வும் எனக்கு வந்ததில்லை.

ஒரு ஆணின் துணை எனக்குத் தேவைப்படவில்லை என்கிறார் இஸா.

1904 ஆம் ஆண்டு பிறந்தவர் இஸா. எடின்பர்க் நகரில் வசித்து வருகிறார். தனியார் விஸ்கி தயாரிப்பு நிறுவனத்தில் அதன் உரிமையாளரின் அந்தரங்க காரியதரிசியாக 35 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். தினசரி தேவாலயத்துக்குப் போவாராம். கோல்ப் விளையாட்டில் ஆர்வம் கொண்டவர். கிறிஸ்தவப் பாடல்களைப் பாடும் குழுவில் உறுப்பினராக இருந்தார்.

இஸாதான் அவரது குடும்பத்தில் மூத்தவர். அவருக்குப் பின்னர் ஆறு தம்பிகளும் தங்கைகளும் பிறந்தனராம்.

எப்போதும் அவர் புன்னகையுடன் காணப்படுவார். சோகமாகவே இருக்கமாட்டார். அவருடைய வயதைச் சொன்னால் யாரும் நம்பமாட்டார்கள். அவர் ஒரு அற்புதமான பெண் என்கிறார் உறவினரான ஷீனா சிலிர்ப்புடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கப் பெண்களின் பிரச்சினை



அமெரிக்கப் பெண்களின் மார்புகள் பெரிதாகி வருகிறதாம். இதனால், பிரா விற்பனையில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதாக நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் இன்றைய தலைமுறை இளம் பெண்களுக்கு குறிப்பாக டீன் ஏஜ் வயதுப் பெண்களுக்கு மார்பு அளவு இயல்பை விட பெரிதாக உள்ளதாம். இதன் காரணமாக கடைகளில் விற்பனையாகும் பிரா விற்பனையில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

தங்களது அளவுக்கேற்ற பிராவை வாங்கிச் செல்லும் பெண்கள், சீக்கிரமே அளவு மாறி விடுவதால் பிராக்களை மாற்ற வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்களாம்.

அமெரிக்காவின் முன்னணி பிரா தயாரிப்பாளரான வகோல் அமெரிக்கா நிறுவனம், கடந்த ஆண்டு 36டி என்ற பிரா வகையை அறிமுகப்படுத்தியது. அது அமெரிக்கப் பெண்களிடையே விரைவாக பிரபலமானது. ஆனால், இந்த ஆண்டு அதை தூக்கி விட்டு 36 டிடி என்ற புதிய பிராவை அறிமுகப்படுத்தியுள்ளது அந்த நிறுவனம். காரணம், ஆரம்பத்தில் நன்றாகப் போய்க்கொண்டிருந்த 36டி பிரா, பின்னர் சைஸ் சரியாக இல்லை என்று பெருமளவில் புகார்கள் வந்ததால்தான் இப்போது 36டிடி என்ற அடுத்த பிராவை களம் இறக்கியுள்ளதாம்.

அமெரிக்கப் பெண்களுக்கு குறிப்பாக டீன் ஏஜ் வயதினருக்கு மார்பக வளர்ச்சி இயல்பை விட பெரிதாக இருப்பதே இந்த பிரா குழப்பத்திற்குக் காரணம் என்கிறார்கள்.

ஏற்கனவே அமெரிக்காவில் பொருளாதாரப் பிரச்சினை இப்போது இந்த 'பிரா'ப்ளம் வேறயா...

சரி இவ்வளவு சொன்ன பின்னும் இந்த 'பிரா'வின் தோற்றம் பற்றியும் தெரிந்து கொள்ளத்தானே வேண்டும்.

கடந்த 1910 ஆம் ஆண்டு நியூயோர்க்கைச் சேர்ந்த பெண்மணியான மேரி பெல்ப்ஸ் ஜேக்கப் என்பவர்தான் இப்போது பெண்கள் அணியும் பிராவைக் கண்டுபிடித்தவர் ஆவார்.

ஸ்டீம் போட்டைக் கண்டுபிடித்த ரொபர்ட் புல்டன் பரம்பரையைச் சேர்ந்தவர் மேரி. 1910 ஆம் ஆண்டு 19 வயதாக இருந்த மேரி, அப்போது நடைமுறையில் இருந்த உள்ளாடையை அணிந்தபோது மிகவும் அசௌகரியமாக உணர்ந்துள்ளார்.

இப்படி ஒரு உள்ளாடையா என்று கடுப்பான அவர் தனது வேலைக்காரப் பெண்ணை அழைத்து, இரண்டு வெள்ளை நிற கர்ச்சீப்களை கையில் கொடுத்து அவற்றை ஒரு பிங்க் நிற ரிபனால் இணைத்து (அதாவது இப்போது உள்ள பிராவைப் போல) அதை தனது மார்பில் அணிந்துகொண்டு பின்புறமாக கட்டிக் கொண்டார்.

இது பெரிய அளவில் வசதியாக இல்லாவிட்டாலும்கூட அப்போது இருந்த பிராக்களை விட மிக மிக வசதியாக இருந்ததாக மேரி உணர்ந்தார். இதையடுத்து இதே பாணியைக் கடைப்பிடித்து விதம் விதமான முறையில் தனது தேவைக்கேற்ப உள்ளாடையை உருவாக்கிப் பார்த்தார்.

அதில் அவருக்கு வெற்றி கிடைத்தது. இதை தனது தோழிகளிடம் சொல்ல அவர்களுக்கும் ஆர்வம் அதிகமாகி அவர்களும் கேட்டு வாங்கி அணிய ஆரம்பித்தனர். இப்படியாக மேரி உருவாக்கிய பிரா பிரபலமானது. இதையடுத்து 1914 ஆம் ஆண்டு அவர் காப்புரிமை பெற்றார். பின்னர் வெறும் 1500 டொலர்களுக்கு அந்த காப்புரிமையை வார்னர் பிரதர்ஸ் நிறுவனத்திடம் விற்றார்.

அதன் பிறகு உலகம் முழுவதும் மேரி தயாரித்த பிராக்கள் புகழ் பெற ஆரம்பித்தன. 1970 ஆம் ஆண்டு தனது 78ஆவது வயதில் மேரி மரணமடைந்தார். அப்போது பிரா தயாரிப்பு பெரும் தொழிலாக மாறியிருந்தது.

தான் கண்டுபிடித்த பிரா குறித்து மேரி ஒருமுறை கூறுகையில்;

பிரேசியருக்கு வரலாற்றில் இவ்வளவு பெரிய இடம் கிடைக்கும் என நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. எனது சுய தேவைக்காகவே இதை உருவாக்கினேன். ஆனால், இது இன்று உலகம் முழுவதும் முக்கியமான விடயமாக மாறியுள்ளது. ஆச்சரியமாக இருக்கிறது என்றார்.

# நெதர்லாந்து பாடசாலைகளில் 'ஓரினச்சேர்க்கை' பாடம்

நெதர்லாந்தில் பாடசாலைப் பாடத்திட்டத்தில் ஓரினச் சேர்க்கை குறித்த பாடம் சேர்க்கப்படவுள்ளது.

நெதர்லாந்து நாட்டுக்கான பாடசாலைப் புத்தகங்களை அச்சடிக்கும் மிகப் பெரிய பிரசுர வெளியீட்டு நிறுவனமான நூர்தாப் இதற்கான திட்டத்தை வகுத்துள்ளது.



ஆண், பெண் ஓரினச் சேர்க்கை குறித்து இந்தப் பாடத்திட்டத்தில் இடம்பெறவுள்ளது.

மேலும் இது தொடர்பான கேள்வி பதில்கள், ஆசிரியர்களுக்கான கையேடு உள்ளிட்டவையும் அது தயாரிக்கவுள்ளது.

இது குறித்து அந்த நிறுவனத்தின் இயக்குநர் கிரிஜன்ஹாட் கூறுகையில்;

உயிரியல், வரலாறு போல ஓரினச் சேர்க்கை குறித்தும் குழந்தைகளுக்கு முறையாகக் கற்றுத் தரப்பட வேண்டியது அவசியமாகும். தற்போதைய பாடத் திட்டங்களில் தாய், தந்தை குறித்து மட்டுமே நாம் போதிக்கிறோம். அதையும் தாண்டி ஓரினச் சேர்க்கையாளர்களின் சமூக அந்தஸ்து உள்ளிட்டவற்றையும் கற்றுத்தரப் போகிறோம்.

தற்போது ஒரே பாலினத்தைக் கொண்டவர்கள் ஜோடிகளாக வாழ்க்கை நடத்துவது சகஜமாகிவிட்டது. அவர்களைப் பார்க்கும் குழந்தைகளுக்கு மனதில் குழப்பம் ஏற்படலாம். தாய், தந்தை என்ற இலக்கணத்தைப் பற்றி மட்டுமே அவர்கள் படிப்பதால் வரும் குழப்பம் இது.

இதையடுத்தே, ஓரினச் சேர்க்கையாளர்கள் குறித்தும் பாடத்தில் சேர்க்க முடிவு செய்துள்ளோம். முதலில் ஒன்லைனில் இதை அறிமுகப்படுத்தவுள்ளோம். பின்னர் புத்தகங்களாக இவை வெளியாகும். அதற்கு சில ஆண்டுகள் பிடிக்கும் எனக் கருதுகிறோம் என்றார் அவர்.

உலகிலேயே முதன் முதலில் நெதர்லாந்தில்தான் ஓரினச்சேர்க்கை திருமணத்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. ஓரினச் சேர்க்கை தம்பதிகள் குழந்தைகளைத் தத்தெடுத்துக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டது. இந்த நிலையில், தற்போது பாடப் புத்தகம் வரை ஓரினச் சேர்க்கை வர ஆரம்பித்துள்ளது.

நெதர்லாந்தில் பாடப் புத்தகங்களை வெளியிடும்போது அரசு அதைக் கண்காணிக்கும். அதேசமயம், பாடப் புத்தகங்களில் இடம்பெற வேண்டிய அம்சங்களை புத்தகங்களை வெளியிடும் நிறுவனங்களே முடிவு செய்யும் சுதந்திரம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிமேலழகரின் உரைச்சிறப்பு

இலக்கிய சுவை...

திருக்குறள் எழுந்த காலத்திலிருந்து உரைகள் பல எழுந்தாலும் உரை வீச்சாளராகத் திகழ்பவர் பரிமேலழகர்.திருக்குறளுக்கு பழைய உரைகளாக பதின்மர் உரையே சிறந்ததாகவும் அவ்வுரைகளும் பரிமேலழகர் உரையே முத்தாய்ப்பாக உள்ளது என்றும் பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார் அறிஞர் பெருமக்கள் கூறுவர். நாகரிகம் என்ற சொல் தற்போது பண்பாட்டிலிருந்து சற்று வேறுபட்டு புற அமைப்பில் ஆடைகளில் ஆபரணங்களில் வாழக்கூடிய வாழ்க்கை முறைகளில் அதன் தாக்கம் இருக்கிறது.ஆனால், திருவள்ளுவர் கிரேக்கத் தத்துவ ஞானி சாக்ரடீஸ் போன்றவர்கள் வாழ்ந்த காலத்திலும் சங்க இலக்கிய காலத்திலும் நாகரிகம் என்ற சொல் பண்பாட்டை மையப் பொருளாகக்கொண்டது. அதனால்தான் வள்ளுவ ஆசான், **பெயக்**

**கண்டும் நஞ்சுண்டு அமைவர்**
**நயத்தக்க**
**நாகரிகம் வேண்டு**
**பவர்(580)**

என்ற குறளை பண்புடைமை என்று அதிகாரப்படுத்தி வைத்துள்ளார். சிறந்த நாகரிகத்தை (அதாவது பண்பாட்டை) விரும்புபவர்கள் விஷத்தைக் கொடுத்தால் கூட பிறர் நலனுக்காக விரும்பி உட்கொள்வார்கள். சிவபெருமான் போல-சாக்ரடீஸ் போல, இதற்கு உரை எழுதப்புகுந்த பரிமேலழகர் **முந்தையிலிருந்து நட்டோர் கொடுப்பினும் நஞ்சும் உண்பர் நனி நாகரிகள் எனும் தொகை நூலான நற்றிணையை(355)** மேற்கோள் காட்டுவார். கடுமையான தவம் மேற்கொண்டவர்களின் திருவாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையும் மந்திரம் போன்றதாகும்.அத்தகைய பெரியோர்கள் வாய்மொழி அவ்வப் பயன்களை அப்படியே பயந்துவிடும் (அதாவது நடந்துவிடும்). உதாரணமாக சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் கவுந்தியடிகளின் வாக்கையும் (நரியாக சபித்தது) கொங்கணவ மகரிஷிகளின் திருக்கண் பார்வையால்(எண்ணத்தால்)பட்ட மாத்திரத்திலேயே பஸ்மமாகிய பறவையையும் கூறலாம். இவ்வாறு ஞான நிலை பெற்றவர்களின் மந்திரச் சொல் இம்மண்ணுலகில் தக்க சமயத்தில் வெளிப்படும் என்பதை வள்ளுவப் பெருந்தகை.

**நிறைமொழி மாந்தர்**
**பெருமை நிலத்து**
**மறைமொழி காட்டி**
**விடும்(28)**

எனும் பொய்யாமொழிக்கு உரை எழுதப்புகுந்த பரிமேலழகர்

**'நிறைமொழி மாந்தர்தம்**
**ஆணையிற் கிளந்த**
**மறைமொழி தானே மந்திரம்**
**என்ப'**
**(தொல்.செய்.178)**

எனும் தொல்காப்பிய இலக்கணத்தின் நூற்பாவை சுட்டிக்காட்டுவார்.

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும் என்பார் ஔவையார். எழுத்தே இறைவன் என்றும்கூடச் சொல்லலாம். இறைபொருளுக்கும் அழிவில்லை. எழுத்துக்கும் அழிவில்லை என்பதை விவிலியம் (யோவான் 1.1.) கூறுகிறது.இதை சூக்கும் வாக்கு என்று சைவசிந்தாந்தம் கூறுகிறது. இந்த வாக்கே அழியாத எழுத்தாகும்.அதனால்தான் அழியாத இறை வாக்காகிய எழுத்தை அட்சரம் என்று வடமொழி கூறும். 'சரம்' என்ற சொல்லுக்கு அழியக்கூடியது என்று பொருள். 'அ' என்ற எதிர்மறைப்பொருள் தரக்கூடிய 'உபசர்க்கத்தை' சேர்க்கும்போது அழியாத என்று வாக்கு.இந்த எண் கருத்தாகவும் உள்ளது. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்ற ஔவையின் வாக்கை திருவள்ளுவர் முப்பாலில்

**'எண்ணென்ப ஏனை**
**எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும்**
**உயிர்க்கு(392)**

இக்குறள் வெண்பாவுக்கு உரை எழுதும் பரிமேலழகர் கருவியும் செய்கையும் ஆகும் என்றும் மேலும் இதை நன்கு விரிவாக அறிய 'ஏரம்ப' முதலிய நூல்களில் காண்க என்றும் குறிப்பிடுகிறார்.

எவ்வளவு செல்வம் இருந்தாலும் அது பிள்ளைச் செல்வத்துக்கு ஈடாகுமோ? அதனால்தான் மாதானுபங்கி தமது உலகப் பொதுமறையில்.

**'பெறுமவற்றுள் யாமறி**
**வது இல்லை அறிவறிந்த**
**மக்கட் பேறுஅல்ல பிற'**
**(61)**

என்று கூறும் குறட்பாவுக்கு 'பெண்ணொழித்து ஆணைக் குறித்து நின்றது' என்ற பரிமேலழகர் உரை மூலமும்

**'ஈன்ற பொழுதின் பெரிது**
**வக்கும் தன் மகனைச்**
**சான்றோன்**
**எனக்கேட்ட தாய்'(69)**

என்னும் வாயுறை வாழ்த்திற்கு இயல்பாக பெண்ணுக்கு தம் மகனைப் பற்றிய ஆற்றலின் எடை போடுவதில் அறிவு குறைவு என்ற பொருளிலும் பிறர் சொல்லிக் கேட்டு தனது மகனை அறிவாற்றலை பிறர் சொல்லி அறிந்து கொள்வதால் கேட்ட தாய் என்பார் உரையாசிரியர் பரிமேலழகர்.அக்காலத்தின் நிலைமையை . காலத்தின் கண்ணாடி இலக்கியம் என்பதற்கொப்ப எடுத்துக்காட்டியிருக்கிறார் பரிமேலழகர் என்றுதான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 200 கோடி ரூபா நன்கொடை




மருத்துவ ஆராய்ச்சிக்காக 210 கோடி ரூபாவை நன்கொடையாக அளித்துள்ளார் ஹரிபொட்டர் கதை புகழ் ஜே.கே.ரவுலிங்.

இங்கிலாந்தைச் சேர்ந்தவர் ரவுலிங். சிறந்த எழுத்தாளர். இவரது ஹரிபொட்டர் நூல்கள் புகழ் பெற்றவை. இந்த கதைகள் மூலம் மிகப் பெரிய கோடீஸ்வரியாக உருவெடுத்தவர் ரவுலிங்.

இவரது தாயார் பெயர் அன்னா. இவர் ஸ்கிளீராஸிஸ் ( குஞ்டுநுணுணிண்டிண்) தாக்கி உயிரிழந்தார்.

ஸ்கிளீராஸிஸ் வந்தவர்களுக்கு மூளையின் நரம்பு செல்கள் தாக்கப்பட்டு செயலிழந்து போகும். முதுகெலும்பும் செயலிழந்து போகும். நரம்பு செல்கள்தான் நமது உடலின் செயற்பாட்டுக்கான கட்டளைகளை ஆக்ஸான்கள் எனப்படும் நீண்ட கற்றைகள் மூலம் அனுப்புகிறது. இந்த ஆக்ஸான்கள் மீது மயலின் மூடியபடி இருக்கும். ஸ்கிளீராஸிஸ் வந்தவர்களுக்கு இந்த மயலின் பாதிக்கப்படும். மேலும் உடலின் எதிர்ப்பு சக்தியும் பாதிக்கப்படும். மயலின் உறுதித்தன்மையை இழந்து செயலிழந்து போனால், ஆக்ஸான்கள் செயலிழந்து கட்டளைகள் போவது தடைப்பட்டுப் போகும்.

இந்த நோய் குறித்த ஆய்வுக்காகவே தனது தாயார் பெயரில் ஒரு மருத்துவ ஆராய்ச்சி மையத்தைத் தொடங்கியுள்ளார் ரவுலிங். அதற்காக 200 கோடி ரூபா நிதியை ஒதுக்கியுள்ளார். எடின்பரோ பல்கலைக்கழகத்தில் இந்த மையம் அமைகிறது. சயரோஸிஸ் தவிர பர்கின்சன் வியாதி, அல்ஸீமர் ஆகிய நோய்கள் தொடர்பான மருந்துகள் குறித்த ஆய்வும் இங்கு மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## தெரிந்துகொள்ளுங்கள்

1. தேசியகீதம் முதன் முதலில் ஜப்பானில் தோன்றியது.

2. ஒரு சிலந்தி ஒரு மணி நேரத்தில் ஏறத்தாழ 450 அடி நீளமுள்ள வலையைப் பின்னுகிறது.

3. பிரான்ஸ் நாட்டில் ஏப்ரல் முதல் திகதியை மீன்கள் தினமாகக் கொண்டாடுகிறார்கள்.

4. முதலையின் ஆயுள் 60 ஆண்டுகள். அதன் முதுகில் இருக்கும் பெரிய புடைப்புகளைக் கொண்டு அதன் வயதைக் கணிக்கிறார்கள்.

5. புல் வகையில் மிக உயரமாக வளரக் கூடியது மூங்கில். 36 மீற்றர் உயரம் வரை இது வளரும். ஒரு நாளைக்கு அரை மீற்றர் அளவு வளரும்.

6. மண்புழுவிற்கு கண்ணும் காதும் கிடையாது. ஆனால், ஒளியையும் அதிர்வையும் உணரக்கூடிய ஆற்றல் உண்டு.

7. 'வீனஸ் கிர்டில்' என்பது நாடா போன்ற இரண்டடி நீளமுடைய ஒரு வகை மீன். இது கடல் நீரில் பல நிறங்களில் தோன்றும். இதை கிரேக்கர்களின் அழகுத் தேவதை அணியும் ஒட்டியாணம் என்று சொல்வார்கள்.

8. கண்ணாடி கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னால் வெண்கலத் தகடுகள் தான் முகம் பார்க்கப் பயன்பட்டன.

9. நில நடுக்கத்தை அளக்கும் கருவிக்கு 'ரிக்டர் ஸ்கேல்' என்று பெயர். சார்ளஸ் ரிக்டர் என்னும் அமெரிக்கரே இதைக் கண்டுபிடித்தார்.

10. 'அறிவியலின் தந்தை' என்று போற்றப்படுபவர் கலிலியோ. இவர் இத்தாலிய வானியல் மேதை. தேவாலய விளக்கு காற்றில் அசைவதைப் பார்த்ததன் மூலம் ஊசல் தத்துவம் என்னும் பெரிய தத்துவத்தைக் கண்டுபிடித்தார்.

11. 'மேக்மா' என்பது பூமிக்குள் உருகிய நிலையில் உள்ள பாறைக் குழம்பின் பெயர்.

12. இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் 22.

13. வளர்ச்சியடைந்த மனிதனின் உடலில் மொத்தம் 206 எலும்புகள் இருக்கும்.

14. ஒரு மரத்தின் பெயரால் அழைக்கப்படும் நாடு 'பிரேஸில்'

15. சவூதி அரேபியா நாடு, பொதுமக்களிடமிருந்து வருமான வரி வசூலிப்பதில்லை.

## குறுக்கெழுத்துப்போட்டி - 50

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 5 |
| 6 | 7 | 8 | ■ | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | ■ |
| 16 | ■ | 17 | 18 | 19 | 20 |
| 21 | ■ | ■ | 22 | ■ | 23 |
| ■ | 24 | 25 | ■ | 26 | 27 |

**இடமிருந்து வலம்**

1. மமதை என்றும் சொல்லலாம்
6. பயங்கரம் (குழம்பியுள்ளது)
9. குழந்தை என்றும் சொல்வர்
11. நிகழ்வு (குழம்பியுள்ளது)
17. இனிப்பான பொருள் (திரும்பியுள்ளது)
24. இலங்கையில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட முயற்சிக்கும் நாடுகளில் ஒன்று
26. கண்ணி என்றும் சொல்லலாம்

**மேலிருந்து கீழ்**

1. தொடக்கம்
2. வளைவு அல்லது மூலை என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது)
3. பரம்பரை என்றும் சொல்லலாம்
5. உடம்பை இப்படியும் அழைப்பர்
9. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் சின்னம்
14. சக்தி என்றும் சொல்லலாம்
20. ஜெயம்

### குறுக்கெழுத்துப்போட்டி - 48 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. நோன்பு | 1. நோய் |
| 4. சதி | 2. பேன் |
| 6. பேய் | 4. சகி |
| 8. கிருமி | 5. திருகோணமலை |
| 11. விம் | 8. மம்மி |
| 14. சிறை | 14. சிற்பி |
| 16. மணல் | 15. கறை |
| 19. கற்பு | 17. பதில் |
| 22. மதி | |
| 25. படலை | |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**எம்.எம்.எப்.நுஸ்கா,**
கல்பிட்டி வீதி, திகழி,
ஏத்தாளை, புத்தளம்.

### பாராட்டுப் பெறுவோர்

01. மங்களம் மனோரஞ்சன்,
இல.69, விட்டவிதானை வீதி,
கல்முனை-02.

02. இ.சிவபாலன்,
உப்புக்கேணி வீதி, பெரியமாவடி,
சாவகச்சேரி.

03. எஸ்.பி.விஸ்வநாதன்,
இல. 14, பிரதான வீதி,
மடுல்சீமை.

04. அ.சரிகா,
இல. 27/2, 6ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

05. எம்.எப்.எம்.ரிம்ஸாத்,
இல.115, அண்ணல் வீதி,
மாஞ்சோலைச்சேனை, கிண்ணியா.

உங்கள் விடைகளை
**Saturday மெயில்**
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கும் அனுப்புங்கள்...

பெயர் : ........................................................

முகவரி : ........................................................

........................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம் கறக்கும் 'பாடங்கள்'



உலகின் உச்சமாகவும் முதன்மை மிக்கதாகவும் விளங்குவது கல்வி! இதனாலேயே 'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்று எமது முன்னோர்கள் கூறிச் சென்றுள்ளனர்.அத்தகைய பெறுமதி வாய்ந்த கல்வி இன்று ஏழைச்சிறார்களின் வயிற்றில் ஈயத்தை உருக்கி ஊற்றும் செயற்பாடாக மாறி வருகின்றது.

குடாநாட்டின் ஒரே மூலவளம் மூளைவளம் தான்! இந்த வளத்தை வனப்பாக்கவும்,வளர்த்தெடுக்கவும் பணமெனும் உரம் பெரிதும் தேவைப்படுகின்றது.வியாபாரச் சந்தைகளான தனியார் கல்வி நிலையங்களில் கல்வியெனும் வியாபாரம் குறைவின்றியே நடக்கின்றது.

அத்தகைய சந்தைகளில் விற்கப்படுகின்ற கல்வியெனும் பண்டத்தை விலை கொடுத்து வாங்க முடியாத எத்தனையோ ஏழை மாணவர்கள் இருப்பதும் வேதனைக்குரியது.

பரீட்சைகள் நடைபெற்று முடிந்த மறுநாளே 'மீட்டல் வகுப்புகள்', 'பிரத்தியேக வகுப்புகள்' என்பன ஆரம்பிக்கப்படுகின்றன.இவை மாணவர்களின் நன்மை கருதிய செயற்பாடுகளல்ல, பணம் கறக்கும் நோக்கத்தை மட்டும் கொண்டுள்ளன.

க.பொ.த.சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளை எழுதும் மாணவர்கள் பரீட்சைக்குப் படித்த 'களை' மாறுவதற்கு முன்னரே தனியார் கல்வி நிலையங்கள் அவர்களுக்கு 'Day Class' எனும் போர்வையில் வலை விரித்து வருகின்றன.இதில் பெரிதும் பாதிக்கப்படுவது ஏழை மாணவர்கள் தான்.

அண்மையில் நடைபெற்று முடிந்த க.பொ.த.உயர்தரப்பரீட்சை முடிந்த முறுநாளே பிரபல தனியார் கல்வி நிலையங்கள், Day Class ஆரம்பம் எனும் விளம்பரங்களை பரப்பத் தொடங்கிவிட்டன.விளம்பரங்களைப் பார்க்கின்ற மாணவர்கள் அலைபாய்கின்றனர்.

குறித்த பரீட்சை எழுதிய மாணவர்களின் பெறுபேறுகள் வெளிவருவதற்கு இரண்டு, மூன்று மாதங்கள் உள்ள நிலையில் 'மீட்டல் வகுப்புகள்' ஆரம்பிப்பது சாத்தியமாகுமா? மூன்று வருடங்கள் அவர்கள் கற்றதை மூன்று மாதங்களுள் மீட்டுவிட முடியுமா? அவ்வாறாயின் அவர்கள் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்ட அந்த மூன்று வருடங்களிலேயே அதனை ஒழுங்காக நிவர்த்தி செய்திருக்கலாமே.

இவ்வாறான விடயங்களைச் சிந்திக்கின்ற பொழுது இவையனைத்தும் 'பணம் கறக்கும்' செயற்பாடாகவே அமைந்துள்ளன.பணம் படைத்தவனுக்கு அது விளையாட்டு மாதிரி,அவன் எத்தனை தடவை வேண்டுமானாலும் கல்வியை 'விலை கொடுத்து வாங்க' முடியும் ஆனால் பணவசதியற்ற மாணவர்களின் நிலை?

பரீட்சை எழுதிய மாணவர்கள் மேலதிக கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளலாம். அன்றேல் தொழின்முறைக் கல்வி ஒன்றைப் பயிலலாம்..அதை விடுத்து சாரை சாரையாகத் தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்று அந்த மூன்று மாதங்களில் எதனை வெட்டிக் கிழிக்கப் போகின்றனர்.

மாணவர்களின் 'சிந்தனை வட்டம்' இத்தகு தனியார் கல்வி நிலையங்களால் குறுகி வருவதாகவும் அவர்களின் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.இது உண்மையென்றே கூற வேண்டும்.

அதாவது, மாணவர்களின் பாடப்பரப்பில் உள்ள அனைத்து விடயங்களையும் குறித்த ஆசான்கள் கற்பிக்காது அவர்களுக்குப் பிடித்த பரப்புகளையே கற்பிக்கின்றனர். மிகுதி நேரங்களில் தமது சொந்த விடயங்களைப் பற்றி அவர்களுக்கும் போதிப்பதாகவும் சமூக அக்கறைதாரர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அது மட்டுமன்றி பரீட்சைக்காலங்கள் நெருங்கும் வரை மாணவர்களுக்கு 'ஓய்வு கொடுக்காது பணம் கறக்கும் நோக்கில் வகுப்புகளை நீடிப்பதாகவும் தேர்வு செய்த பரீட்சை வினாக்கள்' என்று அச்சடித்த காகிதங்களையும் நல்ல விலையில் விற்பனை செய்து வருவதாகவும் கூறினார்.

குடாநாட்டில் ஒரு காலத்தில் கல்வி வளம் ஓங்கியிருந்து மாணவர்கள் முதல்வரிசையில் இடம்பிடித்திருந்தனர்.இன்று 'ஆண்டாரும் இல்லை மடமும் குலைந்தது' எனும் நிலையில் மாணவர்கள் தறிகெட்டுச் செல்கின்றனர்.பாடசாலைப் படிப்பை விட தனியார் கல்வி நிலையங்களிலும் கற்பது தான் 'ஸ்ரைல்' என்று நினைக்கின்றனர்.

இதனைவிடுத்து சேத்தின் மாபெரும் செல்வங்களைான மாணவச் செல்வங்களைச் சிறந்த முறையில் உருவாக்கல் வேண்டும்.நாளைய உலகில் அவருக்கோர் தடத்தை வழிகாட்டல் வேண்டும். இதில் ஏழை மாணவர்களும் உள்ளீர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்.

எஸ்.ரூபனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமல் - அனில்கபூர் இணையும் படம்



கமல்ஹாசனுடன் இணைந்து நடிக்கவுள்ளார் அனில்கபூர். இப்படம் ஒரே நேரத்தில் தமிழ் மற்றும் இந்தியில் உருவாகிறது. கமல்ஹாசனும் அனில்கபூரும் இணைவது இது முதல் முறை. அதேசமயம், இருவருக்கும் ஏற்கனவே ஒரு தொடர்பு உண்டு. கமல்ஹாசன் தமிழில் உருவாக்கிய பிரமாண்ட வெற்றிப்படமான தேவர் மகனை இந்தியில் ரீமேக் செய்து நடித்தார் அனில்கபூர். அப்படம் அங்கு விராசத் என்ற பெயரில் வெளியாகியது. அதேபோல், சலங்கை ஒலி படத்தையும் ரீமேக் செய்து நடித்தார் அனில்கபூர். சமீபத்தில் சென்னை வந்திருந்த அனில்கபூர், கமல்ஹாசனைச் சந்தித்துப் பேசினார். உங்களுடன் சேர்ந்து நடிக்க வேண்டும். அதற்கு ஆர்வமாக இருப்பதாகக் கூறினார் அனில். அதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த கமல், சரி நடிக்கலாம். கதையை தயார் செய்யுங்கள் என்றாராம். கமல் டக்கென்று ஓ.கே. சொன்னவுடன் குஷியாகிவிட்டாராம் அனில்கபூர். கமல்ஹாசனின் ரசிகர் நான். அவருடைய படங்களை நான் இந்தியில் ரீமேக் செய்து நடித்துள்ளேன். இப்போது நான் அவருடன் இணைந்து நடிக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது பெரும் மகிழ்ச்சியாக உள்ளது. இந்திய அளவில் எனக்குப் பிடித்த நடிகர் கமல்ஹாசன். அவரது தீவிர ரசிகன் என்று நான் மும்பையிலேயே சொல்வேன் என்றார் அனில்கபூர்.

## கிம் சர்மா திடீர் திருமணம்

இந்தி நடிகை கிம் சர்மா திடீரென கல்யாணம் செய்து கொண்டுள்ளார்.கென்யாவைச் சேர்ந்த தொழிலதிபரை அவர் மணந்துள்ளார்.

கென்யாவின் மொம்பாஸா நகரில் இந்தக் கல்யாணம் 2 வாரங்களுக்கு முன் நடைபெற்றதாக தெரிகிறது.கிம் சர்மா மணந்துள்ள தொழிலதிபரின் பெயர் அலி புஞ்சனி.நீண்ட நாட்களாக இருவரும் காதலித்து வந்தனர்.ஆனால் கல்யாணத்தை இப்போது ரகசியமாக நடத்தி முடித்துள்ளார் கிம்.இரு வீட்டார்,குடும்ப நண்பர்கள்,நெருக்கமான உறவினர்கள் மட்டுமே இதில் கலந்து கொண்டனராம்.கிம் முன்பு ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த கார்லோஸ்



# Saturday சினிமா

## தெலுங்கில் சனாகான்

சிலம்பாட்டம் படத்தில் நடித்த சனாகான் தம்பிக்கு எந்த ஊரு படத்தில் பரத்துடன் ஜோடியாக நடித்தார். அதன் பிறகு அவர் நடித்திருக்கும் படம் ஆயிரம் விளக்கு. படம் விரைவில் வெளிவரவிருக்கிறது. சனாகானுக்கு கவர்ச்சி மட்டும்தான் காட்டத் தெரியும் என்று சொன்னவர்கள் ஆயிரம் விளக்குப் படத்தைப் பார்த்தால் வாயடைத்துப் போவார்கள் என்கிறார் அளவுகடந்த நம்பிக்கையுடன் . தமிழில் இவரது கவர்ச்சியைப் பார்த்த ஆந்திரக்காரர்கள் சனாகானுக்கு சிவப்புக் கம்பள வரவேற்புக் கொடுத்திருக்கிறார்கள். ஆக, சனாகானும் தெலுங்குக்குப் போகிறார். முதல் படம் கையெழுத்தாகியிருக்கிறது. கல்யாண் ராம் நாயகன். படத்தின் பெயர் இன்னும் முடிவாகவில்லை.

## எனக்குப் பிடித்த நடிகர் கமல்

நடிகர்களின் வாரிசுகளிடம் சினிமாவில் யாரை ரொம்பப் பிடிக்கும் என்று கேட்டால், அப்பா என்றுதான் கூறுவார்கள் அலுக்காமல். ஆனால், கொஞ்சம் வித்தியாசமாக இருக்கிறார் நடிகர் முரளியின் மகன் அதர்வா. பள்ளியில் படிப்பவர் போலிருப்பவர் இப்போதுதான் முதல் படத்தை முடித்திருக்கிறார். பாணா காத்தாடி சுமாராகப் போனாலும் அதர்வாவின் நடிப்புக்கு பாஸ் மார்க் போடுகிறார்கள் விமர்சகர்கள். அதர்வாவுக்கு யாரைப் பிடிக்கும் என்று கேட்டால் அடுத்த நொடி தயங்காமல் வருகிறது பதில். அதர்வாவுக்குப் பிடித்த நடிகர் கமல்தானாம். கமல் படம் வெளியாகிற முதல் நாள் தலைவரை வீட்டில் பார்க்க முடியாதாம். திரையரங்குதான் கதி. இந்த விடயம் அப்பாவுக்குத் தெரியுமா என்று கேட்டால் அவருக்குத்தான் இது முதலில் தெரியும் என்கிறார் புன்னகையுடன்.




ஆயிரம் விளக்கு - சாந்தனு, சனாகான்

## போராளியில் வி.ஐ.பி.

சமுத்திரக்கனியின் போராளி படத்தில் ஒரு வி.ஐ.பி. நடிக்கிறார். முப்பது வருடங்களாக நகைச்சுவை நடிகராகவும் குணச்சித்திர நடிகராகவும் மலையாள சினிமாவில் கோலோச்சும் இன்னொசென்ட் தான் அவர். இவர்தான் மலையாள நடிகர் சங்கம் அம்மாவின் தலைவர் கமலுக்கு கேரள அரசு பாராட்டு விழா ஏற்பாடு செய்தபோது அதில் அம்மா கலந்து கொள்ளாது என அறிவித்தவரும் இவரே. இத்தனை நாள் தமிழ் சினிமாவில் நடிக்காமல் இருந்த இவரை தமிழுக்கு சமுத்திரக்கனி அழைத்துவரக் காரணம் சிக்கார். சமுத்திரக்கனி நடித்த இந்த மலையாளப் படத்தில் இன்னொசென்டும் நடித்திருந்தார். அந்தப் பழக்கமே போராளியில் அவர் நடிக்கவிருப்பதற் காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மரின் என்பவரை காதலித்து வந்தார்.அவருடன் நிச்சயதார்த்தமும் நடந்தது.ஆனால் அதிரடியாக அதை ரத்துச் செய்தார் கிம்.அதேவேகத்தில் தற்போது புஞ்சனியை மணந்துவிட்டார்.நான்கு ஆண்டுகளுக்கு முன்பு யுவராஜ் சிங்கை தீவிரமாக காதலித்தவர் கிம் சர்மா. ஆனால் அது பாதியிலேயே புட்டுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.செஸ் விளையாட்டில் காய்களை நகர்த்துவது போல காதலர்களை மின்னல் வேகத்தில் மாற்றி கிம் சர்மா ஆடிய இந்த திருமண விளையாட்டு பொலிவூட்டை மிரட்டலுக்குள்ளாக்கியுள்ளது.



சுகானி

# சௌந்தர்யாவின் அதிரடி



கல்யாண வீட்ல எல்லோரையும் திருப்திப் படுத்த முடியாது என்று சொல்லிவிட்டார் சூப்பர் ஸ்டார்.மற்றவங்களுக்கு அது பொருந்தும். ஆனால் எங்களுக்குமா என்கிறார்களாம் ஆக்கர் ஸ்ருடியோவின் முன்னாள் ஊழியர்கள்.கடந்த பல வருடங்களாக அன்போடு பழகிய முதலாளியம்மாவுக்கு கல்யாணம்.கட்டாயம் நமக்கும் ஒரு பத்திரிகை வரும்னு காத்திருந்த அவர்களுக்கு ஒரு பிட் நோட்டீஸ் கூட வரவில்லை அங்கிருந்து.

ஆறு மாதங்களுக்கு முன்பே இவர்கள் எல்லாம் கம்பெனியில் இருந்து நீக்கப்பட்டவர்கள்.இந்த நிலையில் ஆக்கரிலிருந்து மிக முக்கியமான நபர் ஒருவரும் நீக்கப்பட்டிருக்கிறார். அதுவும் சில வாரங்களுக்கு முன்புதான். சௌந்தர்யா ரஜினி மீது ஏராளமான கடன் புகார்கள் வந்தபோதெல்லாம் அவர் தரப்பில் ஊடகங்களிடம் பேசி வந்தவர் கார்த்தி.இவர் ஆக்கர் ஸ்டூடியோவின் சி.இ.ஓ.வாகவும் இருந்தார்.இந்தப் படம் தொடர்பான கேள்விகளுக்குக் கூட சௌந்தர்யா சார்பில் பதிலளித்து வந்தவர் இவர்தான். இப்போது இவரை அதிரடியாக நீக்கிவிட்டார் சௌந்தர்யா.ஏராளமாக சுருட்டிவிட்டார் என்று இவர் மீது சௌந்தர்யாவும் எனக்குத்தான் அவர் பணம் கொடுக்க வேண்டும் என்று இவரும் மாறி மாறிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களாம். ஆச்சர்யம் என்னவென்றால் கல்யாண பத்திரிகை இந்த கார்த்திக்குக்கும் இல்லாமல் போனது தான்.இப்போது ஏ.ஆர். ரஹ்மான் இசையில் அஜய் தேவ்கான் நடிக்கும் இந்திப்படம் ஒன்றை தயாரிக்கும் முயற்சியில் இருக்கிறாராம் கார்த்திக்.சௌந்தர்யாவின் சந்தேகம் நியாயமானது தானோ?



உத்தம புத்திரன்–தனுஷ், ஜெனிலியா

# பழிவாங்கும் தனுஷ்

கல்யாணம் முடிந்தது.ஹனிமூனும் முடிந்தது.தனது காட்சிகளை முடித்துக் கொடுக்க சென்னைக்கு வந்திருக்கிறார் மனிஷா கொய்ராலா.மாப்பிளளை படத்தில் தனுஸுக்கு மாமியாராக நடிக்கும் மனிஷா ஒரு முக்கியமான பாடல் காட்சியில் ஆடிவிட்டு போகத்தான் சென்னைக்கு வந்திருக்கிறார்.ஆனால் வந்த இடத்தில் ஆட்டம் இல்லை. அழுகாச்சி மட்டும்தான் நூற்றுக்கும் மேற்பட்ட நடன பெண்கள் புடைசூழ மனிஷாவும் தனுஷும் ஆடுகிற பாடல் காட்சியை படம் பிடிக்க ஏற்பாடு செய்திருந்தனர்.இதற்காக ஏ.வி.எம்.ஸ்ருடியோவில் பிரமாண்ட அரங்கு ஒன்றும் போடப்பட்டுள்ளது.எல்லாம் தயார்.எல்லோரும் தயார்.ஆனால் வரவேண்டிய தனுஷ் திடீரென்று உடம்பு சரியில்லையென்று வீட்டுக்கு சென்றுவிட்டார். மனிஷா கொய்ராலா பிரபல நட்சத்திர ஹோட்டலில் தங்கியிருப்பதால் ஒவ்வொரு நாளும் எதிர்பாராத பில் சுமை.மறுநாளும் தனுஷ் வரவில்லையாம்.எந்திரன் ஓடியோ வெளியீட்டுக்கு மலேசியா செல்ல விரும்பினார் தனுஷ். அதற்கு தயாரிப்பாளரான நேமிசந்த் ஜபக் ஒப்புக் கொள்ளவில்லை.இதை மனதில் வைத்துக் கொண்டுதான் இப்படி பழிவாங்குகிறாரோ என்று முணுமுணுக்கிறார்கள் தொழிலாளர்கள்.

# அனுஷ்கா உடம்பில் ஆத்தா

இந்தத் தலைப்புத்தான் விரைவில் வெளிவரவிருக்கும் பஞ்சமுகி படத்தின் கதை. அருந்ததி வெற்றி பெற்றதால் அதே சாயலில் எடுக்காமல் அதேமாதிரியே இந்த பஞ்சமுகியை எடுத்திருக்கிறார்கள் தெலுங்கில். ஆந்திராவில் இந்தப் படத்தின் பெயர் பஞ்சாக்சரி. இதே பெயரில் ஒரு தெய்வம் பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார். அவர் அடிக்கடி அனுஷ்காவின் உடம்பில் இறங்கு[illegible]



அனுஷ்காவின் தெய்வப்பார்வையிலிருந்து எந்தக் கெட்டவனும் தப்ப முடியாது. இதனால் வில்லன்கள் குறி சொல்லும் அனுஷ்காவை போட்டுத் தள்ளுகிறார்கள். கோபமாகும் பஞ்சாக்சரி அம்மன் அனுஷ்கா சாயலில் இருக்கும் நகரத்துப் பெண்ணின் உடம்பில் இறங்கி வில்லன்களை சூரசம்ஹாரம் செய்கிறார். அருந்ததியின் அதே மணம் குணம் உள்ள இந்தப் படம் அருந்ததியின் வசூலை எட்டிப் பிடிக்குமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயரப் பறக்கும் தங்கம்



முகத்தில் புன்னகை இருந்தாலும் கழுத்தில் தங்கநகை இருந்தால் தான் சமுதாயத்தில் மதிப்பு.கழுத்து நகையை வைத்தே ஒருவரது வசதியின் அளவுகோல் நிர்ணயிக்கப்படுகிறது.ஆனால் ஏறுமுகத்தில் இருக்கும் தங்கத்தின் விலை வசதி படைத்தவரைக் கூட நடுத்தர வர்க்கத்தினராய் மாற்றிவிடுகிறது.திருமணத்தின்போது பெண்ணுக்கு 50 பவுண் நகை கொடுக்க நினைப்பவர்கள் கூட இன்றைய விலைவாசியில் 10 பவுண் நகையாய் பேசி முடிக்கின்றனர்.தங்கத்தோடு வெள்ளியும் போட்டி போட்டுக் கொண்டு விலையேறுகிறது.ஏழ்மை நிலையில் உள்ளவர்கள் சிறுமூக்குத்தி கூட வாங்கமுடியாத நிலை. எத்தனைதான் விலை உயர்ந்தாலும் தங்கத்திற்கு இருக்கும் மவுசே தனிதான். தங்கத்தை விரும்பாத பெண்கள் யார்?

இந்த 'ஜெட் வேக' விலை உயர்வு குறித்து பெண்கள் என்ன கூறுகிறார்கள்?

*** கார்த்திகை செல்வி-தனியார் நிறுவன ஊழியர்.** எனது கணவர் மின்னியலாளர் நான் தாதியாக பணிபுரிகிறேன்.எங்களுக்கு இரண்டும் பெண் குழந்தைகள்.எங்களைப்போன்ற நடுத்தர வர்க்கத்தினர் சீட்டுப்போட்டு அதன் மூலம் நகையை வாங்குகிறோம்.பெண் குழந்தைகளை படிக்க வைத்து வேலை வாங்கிக் கொடுத்தாலும் சீதனமாக தங்க நகை கொடுக்க வேண்டியதை நினைத்தால் வேதனையாக உள்ளது.

*** நந்தினி குடும்பத்தலைவி:** வாங்க முடியாத உயரத்தில் தங்கம் இருப்பது கவலையான விடயம்தான்.புதிய நகை விலை மட்டும் உயரே பறக்கிறது.ஆனால் விற்கும்போது சேதாரம்,கற்கள் என எல்லாத்தையும் கழித்துவிட்டு குறைந்த தொகை தருகின்றனர்.

*** வசந்தி குடும்பத்தலைவி:** காலையில் பணத்தை எடுத்துக்கொண்டு அரைப்பவுண் மோதிரம் வாங்க வந்தேன். வந்த பின்பே விலை கூடியது தெரிந்தது.விலையில் நிச்சயமற்ற நிலை நிலவுகிறது.போகிற போக்கை பார்த்தால் நடுத்தர வர்க்கத்தினர் நகை வாங்குவது கனவு போலாகிவிடும் என்றாலும் தங்கம் தங்கம்தானே.

*** பிரேமலதா கல்லூரி மாணவி:** என் திருமணத்திற்காக புதிய பேஷன் நகைகள் வாங்கலாம் என நினைத்திருந்தோம்.ஆனால் விலை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டேயிருக்கிறது.இனிமேல் 'புதிய நகை" என்று மோகம் கொள்ளாமல் இப்போதே மொத்தமாக வாங்கி வைத்துக்கொண்டால் வரும் ஆண்டுகளில் விலை உயர்வில் இருந்து தப்பிக்கலாம்.

*** எம்.பத்மினி குடும்பத்தலைவி:** பெண்கள் மட்டுமன்றி ஆண்களிலும் ஆபரணங்கள் அணிவதை விரும்பாதவர்கள் இல்லை.பெண்களுக்கு கௌரவத்தை அளிக்கும் பொருள் விலை உயர்வு தொடர்ந்தால் நடுத்தர மக்களுக்கு தங்கம் 'எட்டாக்கனி'யாகிவிடும்.விலை அதிகரித்தபோதும் மண்ணெண்ணெய்,காஸ்,தண்ணீர்,மின்சாரம் போன்று தங்கமும் அத்தியாவசியப் பொருளாக மாறிவிட்டது.ஆனாலும் கௌரவத்திற்காக கடன் பெற்றாவது தங்கத்தை பயன்படுத்தும் நிலை உள்ளது.விலை குறைய ஏதாவது ஒரு மாயம் நிகழ வேண்டும்.

*** ராஜேஸ்வரி-குடும்பத்தலைவி:** பெண்களை படிக்க வைக்கும் போதே சேமிப்பு முழுவதும் கரைந்து விடுகிறது.படித்த பெண்ணுக்கு கூடுதல் நகை போட வேண்டி உள்ளது.அடுத்தடுத்து குழந்தைகள் பிறந்து செய்முறை,சீர்,பெயர் வைத்தல்,காது குத்துதல் என தொடர் செய்முறைகளும் தங்கத்தைக் சார்ந்தே உள்ளன.ஒட்டுமொத்த குடும்ப வாழ்க்கை முறையும் தங்கத்தை சார்ந்து அமைந்துள்ள நிலையில் இந்த விலை உயர்வு பல குடும்பங்களை நிலைகுலைய வைத்துள்ளது. குடும்பங்களில் குறிப்பாக பெண்களுக்கு ஏற்படும் நெருக்கடிகளுக்கும் பிரச்சினைகளுக்கும் தங்கமே காரணம்.தங்கம் விலையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர நடவடிக்கை தேவை.

*** எலிசபெத் ராணி-குடும்பத் தலைவி:** நகை விலை உயர்வால் நடுத்தர மக்கள்தான் பெரிதும் பாதிக்கப்படுவர்.நகைக்கு பதில் இனி சீதனமாக வெள்ளி போன்றவைகளை வழங்க வேண்டிய நிலைதான் உருவாகும்.தங்கத்தின் விலை என்பது நினைத்துப்பார்க்க முடியாததாகவுள்ளது.இன்னும் அதிகரித்து கொண்டே சென்றால் வைரம்,பிளாட்டினம்,போன்றவைகளை வாங்கும் மக்கள் மட்டுமே தங்கத்தையும் வாங்க முடியும் என்ற நிலை உருவாகிவிடும்.

*** எம்.உமா மகேஸ்வரி- அரச ஊழியர்:** தங்கம் விலை அதிகரிப்பால் நடுத்தர மக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும்.சிறு சேமிப்பு திட்டங்கள் மூலம் நகை வாங்கும் கனவும் பொய்த்து வருகிறது.ஏழைகள் குடும்பத்தில் திருமணங்கள் கேள்விக்குறியாகிவிடும்.பொருளாதார பலம் உள்ளவர்கள் மட்டுமே நகை வாங்க முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

*** கே.உமா மகேஸ்வரி-குடும்பத்தலைவி:** விலை உயர்வால் பெண்கள் கவலைப்படுகின்றனர்.சீதனமாக எத்தனை பவுண் போடுவீர்கள் என்றுதான் கேட்கின்றனர்.விலை உயர்வுக்குப் பின் சில நேரங்களில் விலை குறைவது போல் தெரிகிறது.ஆனால் தொடர்ந்து விலை உயர்ந்து கொண்டே செல்கிறது.சாதாரண மக்கள் பாதிக்கப்படுவதால் தங்கத்தில் முதலீடு செய்வதை கட்டுப்படுத்த அரசு முயற்சிக்க வேண்டும்.


**ஆசையும் ஆர்வமும் குறையாத தங்கம்:** தங்கத்தின் மீதான மோகம்.ஒன்-லைன் வர்த்தகம்,தங்கத்தில் முதலீடு போன்ற காரணங்களே விலை தொடர்ந்து அதிகரிக்க காரணம்.

தங்க விலை உயர்வு குறித்து நகை வர்த்தகர் ஒருவர் கூறியதாவது: சீனாவும் தற்போது தங்கம் குறித்த ஒன்-லைன் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளதும் விலை உயர்வுக்கு காரணம்.உலகம் முழுவதும் தங்கம் வாங்கும் சக்தி அதிகரித்து உள்ளது.அமெரிக்க டொலரின் ஏற்றம், இறக்கம் காரணமாக தங்கத்தில் முதலீடு செய்வது அதிகரித்துள்ளது.தங்கம் உற்பத்தி எமது நாட்டில் இல்லாததால் வெளிநாடுகளை நாம் சார்ந்திருக்க வேண்டியுள்ளது.இறக்குமதி செய்யும் தங்கத்தின் மதிப்பு அதன் மீதான வரி அடிப்படையில் விலை நிர்ணயிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார மெயிலில் இவர்...



# முரளி

பூவிலங்கால் இதயங்களை கட்டிப்போட்டிருந்த தமிழ் திரையுலகின் முன்னணி நடிகர்களில் ஒருவரான முரளி தனது படங்களில் காதலை சொல்லாமலேயே செல்லும் அதே பாணியில் திடீரென இப்பூவுலகிலிருந்து விடைபெற்றுள்ளார்.

அவரது திரைப்படங்கள் முடிவடையும் போது அநேகமான ரசிகர்களை அழவைப்பவர் முரளி. அதனைப் போன்றே அவரின் இள மரணமும் தமிழ் திரையுலக ரசிகர்களை அழ வைத்துள்ளது.

1964 ஆம் ஆண்டு மே 19 ஆம் திக்தி முரளி பிறந்தார் தந்தை பிரபல கன்னட திரைப்படத் தயாரிப்பாளர் சித்தலிங்கையா. தந்தை கன்னடத்தை சேர்ந்தவர் என்றாலும் தாய் சென்னையைச் சேர்ந்த தமிழ்ப் பெண்.

கன்னடத்தில் வெளிவந்த பிரேம பார்வ திரைப்படமே அவரது முதல் படமாகும்.பின்னர் 1984 ஆம் ஆண்டிலேயே தென்னிந்திய திரையுலகில் பிரவேசித்த முரளி தமிழில் பூவிலங்கு படம் மூலம் அறிமுகமாகி இதுவரை 99 படங்களில் நடித்துள்ளார்.

பூவிலங்கு படமானது சத்யஜோதி பிலிம்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது அமீர் ஜான் பூவிலங்கு படத்தின் இயக்குனர்.

பெங்களூரில் பிறந்த முரளி தனது தமிழ் திரை பிரவேசத்தின் பின்னர் தொடர்ந்து சென்னையிலேயே இருந்து வந்தார்.

தமிழ் திரையுலகிற்கு வந்த பின்னர் முரளி பிறமொழிப் படங்கள் எதனையும் நடித்திருக்க வில்லையென்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

1984 இல் முரளி அறிமுகமாகியிருந்தாலும் 1990 ஆம் ஆண்டிற்குப் பின்னரே முரளியின் திரைப்பயணம் வெற்றிப் பாதையில் சென்றது.

இக்காலப்பகுதியில் தான் இதயம், புதுவசந்தம்,பகல் நிலவு,அ தாக மனசுக்காரன் உள்ளிட்ட படங்களில் முரளி நடித்திருந்தார்.

தமிழ் திரையின் பிரபல நட்சத்திரங்களான ரஜினிகாந், கமல்ஹாசன் ஆகியோரிற்கு போட்டியாக 1990களில் முரளி நடித்ததுடன் அவரின் படங்களும் தொடர்ச்சியாக வெளிவந்தன.

முரளியின் திரையுலக பிரவேசம் ரஜனி,கமல் போன்ற நடிகர்களுக்கு அக்காலப்பகுதியில் சவாலாகத்தான் இருந்தது.

இடையில், ஷோபா வை திருமணம் செய்து கொண்ட முரளிக்கு அதர்வா,ஆகாஷ் என்ற மகன்களும் காவ்யா எனும் மகளும் உள்ளனர்.

1984 முதல் 2002 ஆம் ஆண்டுவரை சிறந்த படங்களை தந்து கொண்டிருந்தவர் நடிகர் முரளி.25 வருடங்கள் திரையுலகில் பணியாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முரளி இறுதியாக நடித்துள்ள படம் பாணா காத்தாடி [2010] இப்படத்தில் முரளியின் மகன் அதர்வா நாயகனாக நடிக்கின்றார்.

அதை விட மற்றுமொரு சிறப்பம்சம் என்னவெனில் முரளியை திரையுலகிற்கு அறிமுகம் செய்துவைத்த சத்ய ஜோதி பிலிம்ஸ் நிறுவனத்தினர்தான் இப்படத்தினையும் தயாரித்துள்ளனர்.

இதயம் முரளியின் வெளியீடுகளில் மிகமுக்கியமானதும் பரந்த வரவேற்பை பெற்றதுமான படமாகும்.இப் படத்தினை தமிழ் ரசிகர்கள் எளிதில் மறந்துவிட முடியாதளவிற்கு முரளியின் நடிப்பும் கதையும் அமைந்தது.

அத்துடன் விக்ரமனின் வெளியீடான புதுவசந்தம் முரளியின் மற்றுமொறு பிரமாண்டமான அமைதியான படைப்பு.

இவ்வறாக தனக்கென ஒரு ரசிகர் கூட்டத்தை உருவாக்கிய நிலையில் கடந்த 8 ஆம் திகதி திடீர் மாரடைப்பால் முரளி மரணமடைந்தார்.

இருந்தாலும் தனது மகனை திரையுலகில் அறிமுகம் செய்துவிட்டே முரளிஇப்பூவுலகினை விட்டுச்சென்றுள்ளார்.


முரளியின் ரசிகர்களை திருப்திப்படுத்த வேண்டிய பொறுப்பு மகன் அதர்வாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.


மீண்டும் தமிழ் திரையில் புதுவசந்தத்தை அதர்வா ஏற்படுத்துவாரா என்பதை அறிய முரளியின் ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

'இதயமே இதயமே உன் மௌனம் ரசிகர்களை தவிக்க வைத்துள்ளது...'

**யோ.நிமல்ராஜ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவு சுருங்குகிறது

நம்மை பெரிதும் கவர்ந்த பூமியின் துணைக் கோள் நிலா. கவிஞர்கள் நிலவைப் புகழ்ந்த அளவுக்கு வேறு எதையும் புகழ்ந்திருக்கமாட்டார்கள்.

தற்போது நிலவைப் பற்றி ஒரு புதிய தகவலைக் கூறியிருக்கிறார்கள் கோள் ஆராய்ச்சியாளர்கள். அதாவது நிலா சுருங்கிக் கொண்டிருக்கிறது என்கிறார்கள். அதற்கு ஆதாரமாக நிலவுப் பரப்பில் காணப்படும் விரிசல்களை அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். ஒரு கோளானது குளிரும் போதோ சுருங்கும்போதோ மட்டுமே அம்மாதிரியான விரிசல்கள் ஏற்படும்.

ஆனால், நிலா சுருங்குவது குறித்து அச்சப்படத் தேவையில்லை. அது மிக மிக மெதுவாகத்தான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று ஆறுதலும் அளிக்கிறார்கள் விஞ்ஞானிகள்.

அவர்கள் தாங்கள் செய்துள்ள ஆய்வின்படி நிலவானது கொஞ்சம் கொஞ்சமாகக் காற்று இறங்கும் பலூனைப் போல சுருங்குகிறது. அதன் உட்பகுதி குளிர்வதால் இந்தச் சுருக்கம் ஏற்படுகிறது என்று தெரிவிக்கின்றனர். அந்தச் சுருக்கம் நிலவின் சுற்றளவை 100 மீற்றர் அளவுக்குக் குறைத்திருக்கிறது என்று கூறப்படுகிறது.

நிலவின் உட்பகுதி குளிரும்போது அது சுருங்குகிறது. அப்போது அதன் நிறைக்கு ஏற்ப அதன் வெளி அடுக்கும் அட்ஜஸ்ட் ஆக வேண்டியிருக்கிறது. அதனால்தான் வெளிப்பகுதியில் விரிசல்கள் ஏற்படுகின்றன என்று ஸ்மித்சான்சியன் நிறுவன முன்னணி விஞ்ஞானி டாக்டர் தாமஸ் வாட்டர்ஸ் தெரிவிக்கிறார்.

நிலவின் பீடப் பகுதியில் ஏற்பட்டிருக்கும் அந்த விரிசல்களை விண்வெளியில் இருந்து அனுப்பப்பட்டிருக்கும் காட்சிகள் மூலம் விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இம்மாதிரியான விரிசல்கள் அப்பல்லோ விண்கலம் 1970 ஆம் ஆண்டில் எடுத்து அனுப்பிய படங்கள் மூலம் முதன்முதலாக அறியப்பட்டன. இப்படி நிலவு சுருங்குவதால் அது இல்லாமலே போய்விடப்போவதில்லை.பூமிக்கும் எவ்விதப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று விஞ்ஞானிகள் நிம்மதி அளிக்கின்றனர்.

# மலேரியாவைக் கட்டுப்படுத்த புதிய நுளம்புகள்

'மலேரியா' காய்ச்சலை மனித இனத்தைவிட்டு விடைபெறச் செய்ய வழிகண்டு விட்டார்கள் விஞ்ஞானிகள்.

கொசுக்களால் பரவும் கொடிய வியாதி மலேரியா. உலகம் முழுவதும் ஆண்டுக்கு 25 கோடி பேர் இந்த வியாதியால் பாதிக்கப்படுகின்றார்கள். இதில் 10 இலட்சம் பேர் இறந்துவிடுகிறார்கள் என்று ஒரு புள்ளிவிபரம் தெரிவிக்கிறது.


இனி, தீமை விளைவிக்கும் கொசு இனமே இருக்காது என்கிறார்கள் விஞ்ஞானிகள். அமெரிக்காவின் அரிசோனா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மரபணு மாற்றம் செய்யப்பட்ட கொசுக்களை உற்பத்தி செய்திருக்கிறார்கள். இது மலேரியாவுக்கு எதிரான போர்ப்படையாகப் பயன்படுத்தப்பட உள்ளது.

இந்தக் கொசுக்கள் ஒருமுறை ஒருவரைக் கடித்துவிட்டுச் சென்றால் அவரது ஜீன்களில் மலேரியா நோய் எதிர்பொருள் நிலைபெற்றுவிடும். அதன்பிறகு அவரது பரம்பரையில் யாருக்குமே மலேரியா பாதிப்பு வராது. இதனால் எதிர்காலத்தில் மலேரியா இல்லாத தலைமுறைகள் உருவாகும் என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

செயற்கை கொசு மற்றும் ஊசி மூலம் மலேரியா நோய் எதிர்ப்பு சக்தியை மனிதர்களுக்கு உருவாக்கும் உன்னதப் பணியை விரைவில் தொடங்க முடிவு செய்துள்ளது அமெரிக்கா.



# விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



# புயலுக்குப் பின்னால்...

'புயலுக்குப் பின்னால் அமைதி' அன்று சொல்வார்கள். ஆனால், சிறுபுயல்கூட எல்லோரையும் பீதி அடையத்தான் செய்யும். உண்மையில் புயலுக்குப் பின்னால் அமைதியாகச் செயற்படுவது வானிலை ஆய்வு மையங்களும் இயற்கை இடர் மேலாண்மை அமைப்புகளும் தான்.

[illegible]



வங்கக் கடல்தான் அதிகமாக புயல்கள் உருவாகும் கடல் பகுதியாகும். கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட 10 புயல்களில் 9 புயல்கள் வங்கக் கடலில் உருவானவை என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

உலகிலேயே மிக உயரமான கொந்தளிப்பு அலைகளை ஏற்படுத்தியது பக்ஹர்கஞ்ச் புயல்தான். 1876 ஆம் ஆண்டு வங்கதேசத்தைத் தாக்கிய புயல் இது. இப்படி பெரும் புயல்கள் மனித சமுகத்தை கலங்க வைப்பதைத் தடுப்பதற்காக 1972 இல் புயல்களைக் கணிக்கும் 'எஸ்கேப் பேனல் ஆன் டிரோபிகல் சைக்ளோன்ஸ்' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. உலக வானிலை ஆய்வுக் கழகம் மற்றும் ஆசியா-பசிபிக் பொருளாதார சமூகக் குழு ஆகிய அமைப்புகள் இணைந்து இந்த அமைப்பை ஏற்படுத்தின. இந்த அமைப்பில் இந்தியா, மியான்மார், பாகிஸ்தான், வங்கதேசம், இலங்கை, தாய்லாந்து, மாலைதீவுகள், ஓமன் ஆகிய நாடுகள் உறுப்பு நாடுகளாக உள்ளன.

கடலில் காற்றழுத்தத் தாழ்வு மையம் உருவானது அதை ஆழமாக ஆராய்ந்து, புயலின் தீவிரம் பற்றி உறுப்புநாடுகளுக்குத் தகவல் தெரிவித்து மக்களைப் பாதுகாப்பதே இந்த அமைப்பின் பணியாகும். புயல்களுக்குப் பெயரிடுவதும் இந்த அமைப்புதான். சமீபத்தில் கலக்கிய லைலா புயலுக்கு பெயர் சூட்டியது பாகிஸ்தானாகும்.

# திருமண வாழ்க்கை நல்லது என்கிறது ஆய்வு

ஒற்றை ஆளாக இருப்பவர்களை விட திருமணமானவர்களுக்கு நன்மை அதிகம், அது மனநெருக்கடி தொடர்பான ஹார்மோன்களின் வெளியீட்டைக் குறைக்கிறது என்று சிகாகோ பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கண்டு பிடித்திருக்கின்றனர். மன நெருக்கடி ஏற்படும்போது 'கார்ட்டிசோல்' என்ற ஹார்மோன் வெளியிடப்படுகிறது.



அதன் அளவை வைத்துத்தான் ஒருவர் எந்த அளவு நெருக்கடியில் தவிக்கிறார் என்று கணக்கிடப் படுகிறது. ''மனரீதியான நெருக்கடியால் வெளியாகும். கார்ட்டிசோல் ஹார்மோனின் தாக்கத்தை திருமண வாழ்க்கை குறைப்பதை நாங்கள் கண்டு பிடித்திருக்கிறோம்'' என்கிறார், ஆராய்ச்சிக் குழுவில் இடம்பெற்ற பேராசிரியர் டாரியோ மேஸ்ட்ரி பியரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் சிறுகதை

# பஸ் பயணம்

எஸ்.நதிபரன்,
நல்லூர்.



அந்தப் பேருந்தில் சனக்கூட்டம் அதிகமாகவே இருந்தது. 'எல்லோரும் பின்னுக்குப் போங்கோ பின்னுக்குப் போங்கோ...' பஸ் நடத்துநரின் அலறல் பஸ்ஸின் இரைச்சலையும் கிழித்துக் கொண்டு பயணிகள் மத்தியில் விசனத்தையும் கோபத்தையும் தூண்டியது. 'தம்பி இஞ்ச பின்னுக்குப் போ! எண்டு கத்தினால் எப்படிப் போறது? அளவுக்கு அதிகமாக ஆக்களை ஏத்துகிறது. பிறகு பின்னுக்குப் போ எண்டால் இடமிருந்தால் தானே போறதுக்கு..' வயதான ஒரு பெண்மணியின் ஆதங்கமான கேள்வி. அக்கேள்வியின் பிரதிபலிப்பே எல்லாப் பயணிகளின் மத்தியிலிருந்தும் வந்தது.

அந்தப் பிரதிபலிப்புக்கு 'நீங்கள்தானே வலிந்து ஏறிப் போட்டு இப்படியே கதைக்கிறது இல்லாவிட்டால் உடன் இறங்குங்கோ புட்போட்டில (*Foot Board*) ஆக்களை ஏத்திப்போட்டு நீங்களே பொலிஸுக்கு காசு கட்டுறது' என்ற பஸ் நடத்துநரின் திமிரான வார்த்தைகள் பதிலாக வந்தது. அதற்கும் எதிரொலியாக இன்னொரு பஸ் பயணியிடமிருந்து 'தம்பி ஏன் அளவுக்கு அதிகமாக ஆக்களை ஏத்தினீர்? அளவோடை ஏத்தினா என்ன?' என்ற காரமான கேள்வியால் கடுப்படைந்த பஸ் நடத்துநர் 'நீங்கள் எப்படிப்போனாலும் பறவாயில்லை எமக்கு வருமானம் தான் முக்கியம்' என்ற பதில் பயணிகளுக்கு எரிச்சலை ஊட்டியது.

கதைத்துப் பிரயோசனம் இல்லை என்ற நிலை பயணிகளுக்கு. யாரொடு நோவோம் யார்க்கெடுத்துரைப்போம் என்ற பயணிகளின் வேதனையான வேண்டுதல்களுடன் பஸ் வேகமாக நகர்ந்து கொண்டிருந்தது. பஸ்ஸின் இரைச்சல் ஒருபுறம் பயணிகளின் ஓலங்கள் ஒரு புறம். பஸ்ஸின் உட்புறத்தை ஆக்கிரமித்திருந்தது. அத்தனை ஒலிகளையும் தாண்டி குழந்தை ஒன்றின் கதறல் அனைத்துப் பயணிகளின் காதுகளுக்கும் எட்டியது. அனைத்துப் பயணிகளின் கண்களும் ஒரு கணம் சத்தம் வந்த திசையை நோக்கித் திரும்பின. ஒரு கையில் கைக் குழந்தை மறுகை விழாமல் இருப்பதற்காக பஸ்ஸில் அமைக்கப்பட்டிக்கும் கம்பியைப் பிடித்தவாறு ஒரு இளம் பெண் ஆடி அசைந்து துன்பப் பட்டுக் கொண்டிருப்பது அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. பயணிகள் அனைவரும் கவலைப்பட்டார்களே ஒழிய அந்த இளம் தாய்க்கு ஒருவர் கூட ஆசனம் கொடுக்க முன்வரவில்லை.

அந்தப் பெண் நிற்கும் முன்புறம் அமர்ந்து கொண்டு இளம் பெண்கள் இருவர் சிரித்துக் கதைத்தபடி இருந்தனர். அவ்வப்போது அவர்களிடம் செல்போனின் உரையாடலும் மேலோங்கியிருந்தது. அவர்களின் இரக்கப் பார்வைக்குள் அந்தப் பெண்ணின் பரிதாப நிலை அகப்படவில்லை.

இந்நிலை தொடர்வதை மேலும் பொறுக்கமாட்டாது கர்ப்பிணிப் பெண் ஒருவர் எழுந்து தனது வேதனையையும் பொருட்படுத்தாமல் 'அக்கா கைக்குழந்தையோடு உப்படி சிரமப்படுவது மனிதாபிமானம் கொண்ட எவராலும் சகிக்க முடியாது கருவாக இருக்கும் போதும் 10 மாதங்கள் சுமப்பதுடன் ஒரு தாயின் கடமை முடிந்து விடுவதில்லை. குழந்தை பெத்த பின்பும் சுமக்க வேண்டிய நிலைக்குள் தாய் தள்ளப்பட்டுள்ளாள். எனக்கும் இந்த நிலை நாளைக்கு நடக்கலாம். ஒரு தாயின் வேதனையை பெண்களாக பிறந்தவர்களே புரிந்து கொள்ளாத போது வேறு யார் தான் புரிந்து கொள்வார்கள்...' என்று உச்ச தொனியில் கூறியவாறு அந்தக் கர்ப்பிணிப் பெண் அந்தரத்தில் கைக்குழந்தையுடன் தொங்கிக் கொண்டிருந்த அப் பெண்ணுக்கு இடம் கொடுத்தாள்.

அக் கர்ப்பிணிப் பெண் கூறிய வார்த்தைகள் எல்லாப் பயணிகளின் மத்தியிலும் எதிரொலித்தது. சிரித்துக் கதைத்தவாறு இருந்த இளம் பெண்களின் காதுகளுக்கும் எட்டியது. தாம் செய்த தவறை உணர்ந்து வெட்கித் தலை குனிந்ததுடன், எழுந்து நின்று அந்த இளம் தாய்க்கு இடம் கொடுக்க முன்வந்தனர். பஸ் நடத்துநருக்கு பஸ் பயணிகள் செய்த நீதியான ஞான உபதேசம் கூட அந்த இளம் கர்ப்பிணிப் பெண் செய்த செயலின் பின்னர் பொய்த்து விட்டது என்பதே யதார்த்தமாகும்.

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
Saturday மெயில் சிறுகதை
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடந்த நிஜம்

யுத்தம் முடிந்ததாம் இன்னும்
எங்கள் நெஞ்சினில் - ஷெல்
சத்தங்கள் நிற்கவில்லை
ஆழ்ந்த உறக்கம் - எனக்கு
திடுக்கிட்டு எழுகிறேன்
நிமிடமொருமுறை - ஷெல்
சத்தம் கனவில் விரட்டுது
இனிய இசைகளை கேட்டு
ரசித்த என்செவிகள்
செத்துப்போய் கிடக்கிறதே!
என்னைப் பெற்றவள்
ஆசையாய் மகனே!
என்றழைப்பது கேளாமல்

**சந்திதாசன், சந்திவெளி.**

## மழை வருமா...?

வானம் கறுத்திருக்கு,
வையம் காத்திருக்கு,
பைய உழுத நிலம் பார்த்திருக்கு,
கையில் ஏரெடுத்த ஒருழவன்-கருந்
தையல் வான் தைக்கப் பார்த்திருந்தான்!

பரிதியின் கிரணங்கள் இப்பாரினில்
அகன்றன-குளிர் காற்று
ஓடிவர வெப்பம் அகன்றதுவே!
சத்தம் வந்ததுவே-வருமுன்
பட்டென ஒளி பிறந்ததுவே!

புற்கள் தலைகாட்டவும்
புன்னை மரம் தலைசாயவும்
வரப்பமைக்க உழவனும்
வண்ணமயில்கள் ஆடவும்
சிற்றாறு பெருக்கெடுக்கவும்
சிரத்தையோடு காத்துக்கிடந்தன!

ஐயகோ! எல்லாம் நடக்க
காற்றெழுந்து வீசிய-
கருமேகம் கலைந்தது!

வானம் வெளுத்தது-செஞ்சூரியன்
வரவினிலே,
உழுத நிலம் காயுது
உழவர் மனமும் வேகுது!

**ஜீ.ஷஜீவன்,**
**சுதுமலை.**

## தாய்

அன்னையே எல்லாமே நீ
பத்துமாதம் என்னை
வயிற்றில் சுமந்தவள் நீ

பத்தியங்கள் பலகாத்து
பாரினில் என்னை
உதிக்கவைத்தவள் நீ

உதிரத்தைப் பாலாக்கி
என க்கு உயிர் ஊட்டியவள் நீ

வீட்டில் இருக்கும் போது
ஆசான் நீ
விடுகதைபல சொல்லி
அறிவு ஊட்டியவள் நீ

ஐந்து வயதினில் என்னை
பள்ளிக் கனுப்பி
அறிவை வளர்க்கச் செய்தவள் நீ

பருவத்தின் வாசலில்
என்னில் வளர்ச்சிகண்டு
பூரித்து நின்றவள் நீ

உன்னை வாழ்த்திக்கவிபாட
எனக்கு கருப் பொருளாய்
அமைந்த நடமாடும்
தெய்வம் நீ நீயே

**ச.பகீரதன்.**




## ஆண்கள் விற்பனைக்கு...?

எங்கள் ஊர்
கல்யாணச் சந்தைகளில்
ஆண்கள் விற்பனைக்குண்டு
பத்து இலட்சம்...
முப்பது இலட்சம்...
இன்னும் பல இலட்சங்களில்!
இன்றே முந்துங்கள்
இல்லையேல் நொந்துவிடுவீர்கள்
பெண்களைப் பெற்றுவிட்டு
பெருமிதம் கொள்ளாதீர்
கரும்புதின்னக் கூலிவேண்டுமாம்!
சீதனம் எனும் பெயரில்-மொத்த
ஆதனத்தையும் பறிக்கும்
பகற்கொள்ளை நிலவும் பூமியிது!

**யோ.கௌதமி,**
**சுதுமலை வடக்கு.**

## அகதியா நான்?

தொடுவானத்திற்கும் என் வாழ்க்கைக்கும் இடையே
மிகவும் நெருங்கிய தொடர்புண்டு
இரவுக்காகக் காத்திருக்கும் நட்சத்திரங்களைப் போல்
சுதந்திரத்திற்காக காத்திருந்து அகதியானேன் நான்

ஓர் விடியலாவது எனக்காய் விடிந்தால்
நான் அகதி எனும் பெயரை
கணப்பொழுதில் களையகற்றி பறவையாய்
நானும் சுதந்திரமாக பறந்திடுவேனே

இந்த உலகம் பொய்யோ மெய்யோ நான்
அறியேன் அகதியாய் வாழும் வரை
விண்வரை வளர்ந்துள்ளது விஞ்ஞானமல்ல
அகதி எனும் அந்தஸ்து மட்டும்தான்

பாய்ந்திடும் நதி கூட கடலுடன் சங்கமிக்கும்
அகதியாய் வாழும் நான் எப்பொழுது சங்கமிப்பேன்,
என் நாட்டின் சுதந்திரத்தாயுடன் இறைவா!
எனக்கோர் விடைகூறு ஆயுள்வரை அகதியா? நான்

**ஜெயராணி**
**பணிப்புலம், பண்டத்தரிப்பு.**

## உணர்வுகளின் ஊடறுப்பு

பலவீனங்களோடு-ஆனால்
பலமான இலக்கொன்றை
தேடித் தவழுகின்ற
குழந்தை நான்
மெல்லச் சாகின்ற தமிழை
முதற்தாயாக்கி
முடங்கிப்போன மனிதத்தை
வாழத்துடித்துக் கொண்டே
முட்களூடாகத்
தவழுகின்றேன்
என் செவிப்பறையில்
ஓங்கி அறையப்படுகின்ற
ஆன்மாக்களின்
அழுகுரல்கள்...
விழித்திரையில்
காட்சியாகின்ற
கொடூரங்கள்...
அறிவுக்கும் எட்டாத
அலங்கோலங்கள்...
நாகரிகத்தின் நல்லவை
தவிர்ந்த
மற்றவையின் மது
போதை...
ஊடகங்கள் காவிவரும்
நாட்டு நடப்புகள்...
அரசியலில், மதங்களில்
ஊறிவிட்ட ஊழல்கள்...
உண்மைகள் ஊழல்கள்...
உண்மைகள் ஊமையாகி
உள்ளங்கள்
உடைந்த போதும்
உணர்வுகள் செய்கின்ற
ஊடறுப்பும்
கடவுளின்
கருணைக்கசிவும்
என் தொலைதூரக்
கனவுக்கு
கதவுதிறந்து அர்த்தம்
சொல்லும்...
அந்த நாளுக்காய்
நம்பிக்கையோடு
நடக்கிறேன்.

**அ.அல்வின்,**
**பொற்பதி, குடத்தனை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாமதத்துக்குக் காரணம்



**ஆசிரியை:** றோசி ஏன் பாடசாலைக்கு இவ்வளவு தாமதமாக வருகிறாய்?

**றோஸி:** ஒரு பையன் என்னைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்தான்.

**ஆசிரியை:** அவன் பின் தொடர்ந்து வந்ததற்கும் நீ பாடசாலைக்குத் தாமதமாக வருவதற்கும் என்ன தொடர்பு?

**றோஸி:** அவன் மிகவும் மெதுவாக அல்லவா ரீச்சர் நடந்து வந்து கொண்டிருந்தான்.

## அவர் எனது நண்பனில்லை



உங்களது வீட்டில் உங்கள் மனைவியை உங்கள் நண்பன் முத்தமிட்டுக் கொண்டிருக்கிறான் என்று ராமுவிடம் சோமு கூறினான்.

ராமு உடனடியாக ஓடிச் சென்றுவிட்டான். என்ன நடக்கிறது என்று பார்த்து விட்டுத் திரும்பி வந்து சோமுவின் முகத்தில் அறைந்தான் ஆத்திரத்துடன்.

ஏன் என்னை அடிக்கிறாய் என்று சோமு கேட்க ராமு கூறினான். அது எனது நண்பனில்லை என்று.

## பழைமை வாய்ந்த சிலை



**நூதனசாலை காவலாளி:** நீங்கள் உடைத்தது 500 வருடங்கள் பழைமை வாய்ந்த ஒரு சிலை.

**பார்வையாளர்:** நல்லவேளை நான் அதைப் புதியது என்று நினைத்தேன்.

# குடிப்பழக்கத்தையும் புகைப்பழக்கத்தையும் ஊக்குவிக்கும் ரஷ்ய நிதியமைச்சர்



அரசாங்கங்கள் எப்போதுமே அதன் பிரஜைகள் மத்தியில் குடிப்பழக்கத்தையும் புகைப்பழக்கத்தையும் குறைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதே வழமையாகும்.

ஆனால், ரஷ்ய அரசாங்கம் தென் மக்களை நன்றாக குடிக்குமாறும் புகைக்குமாறும் தூண்டுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

ரஷ்ய நிதியமைச்சர் கடந்த வாரம் தனது நாட்டு மக்களை சாத்தியமானளவுக்கு மதுவகைகளைக் கூடுதலாக அருந்துமாறும் கூடுதலான சிகரெட்டுகளைப் புகைக்குமாறும் கேட்டிருக்கிறார். கூடுதலான மதுப்பாவனை, சிகரெட் புகைத்தலினால் வரிகள் மூலமாகப் பெறக்கூடிய பாரிய வருமானத்தை சமூக நலன்புரித் திட்டங்களுக்குச் செலவிடக்கூடியதாக இருக்கும் என்பதே அவர் தனது கோரிக்கையை நியாயப்படுத்துவதற்கு முன்வைக்கும் வாதமாக இருக்கிறது.

'தினமும் ஒரு பெக்கெட் சிகரெட்டுகளை நீங்கள் புகைக்கின்றீர்கள் என்றால், சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் அரசாங்கத்துக்கு நீங்கள் கூடுதலாக உதவுகின்றீர்கள் என்பதுதான் அதன் அர்த்தமாகும். குடிப்பழக்கம் அதிகரிப்பதன் மூலமாக பெறக்கூடிய வருமானங்களைப் பயன்படுத்தி சமூக நலன் புரித் திட்டங்கள் பலவற்றை முன்னெடுக்கும் போது நாட்டில் பிறப்பு வீதம் அதிகரிக்கும், சமூக சேவைகள் அதிகரிக்கும், குடிப்பரம்பல் அதிகரிக்கும்' என்று ரஷ்ய நிதியமைச்சர் அலெக்ஸி குட்றின் கூறியதாக இன்ரர் பாக்ஸ் செய்திச் சேவை தெரிவித்திருக்கிறது.

குடிகாரர்களும் புகைப்பழக்கமுடையவர்களும் அரசாங்கத்துக்கு கூடுதலாக உதவுகிறார்கள் என்பதை மக்கள் புரிந்து 'கொள்ள வேண்டும். என்று குட்றின் கூறியிருக்கிறார்.

மதுபானங்கள் மற்றும் சிகரெட் வகைகள் மீதான கலால் வரியை அதிகரிப்பதற்கு ரஷ்ய அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

ரஷ்யாவில் ஏற்கெனவே மதுப்பாவனையும், சிகரெட்டு பாவனையும் மிகவும் உயர்வாகவே இருக்கின்றன. 65 சதவீதமான ரஷ்யர்கள் புகைப்பழக்கமுடையவர்களாக இருக்கிறார்கள். சராசரி ரஷ்யர் வருடமொன்றுக்கு 18 லீற்றர் மதுவகைகளைக் குடிக்கிறார் என்று நியூயோர்க் போஸ்ட் அண்மையில் மேற்கொண்ட ஆய்வொன்றில் கண்டறியப்பட்டிருக்கிறது.

ரஷ்யர்கள் மத்தியிலான அதிக மதுப் பழக்கம் அவர்களின் ஆயுட்காலத்தில் எதிர்மறையான தாக்கத்தைக் கொண்டிருக்கிறது. பங்களாதேஷ் மற்றும் ஹொண்டூரஸ் போன்ற நாடுகளையும் விட ரஷ்யர்களின் சராசரி ஆயுட்காலம் குறைவானதாகவே இருக்கிறது. குடிப்பழக்கத்தின் விளைவாக வருடாந்தம் சுமார் 5 இலட்சம் ரஷ்யர்கள் மரணமடைகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப்பிழக்கும் வீரர்கள்



இந்திய அணியில் திறமையான இளம் வீரர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.ஆனால், இவர்களுக்கு விளையாடும் லெவன் அணியில் வாய்ப்பு கிடைப்பது எட்டாக் கனியாக உள்ளது. சமீபத்தில் இலங்கையில் நடத்த ஆசிய கோப்பை மற்றும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர்களுக்கு சௌரவ் திவாரி, ரவிச்சந்திரன் அஸ்வின் உள்ளிட்ட இளம் வீரர்கள் தேர்வு செய்யப்பட்டனர். ஆனால், இவர்களுக்கு விளையாடும் லெவன் அணியில் வாய்ப்பு கிடைக்காமல் பெவிலியனில் அமர்ந்து மூத்த வீரர்களின் ஆட்டத்தை கண்டு ரசித்தனர்.

கடந்த 2006 இல் கிரிக்கெட் அரங்கில் காலடி வைத்த ஜார்கண்ட் வீரர் சௌரவ் திவாரி பார்ப்பதற்கு தோனி போன்று தோற்றம் கொண்டவர்.இவரது தலைமையில் கடந்த 2008 இல் மலேசியாவில் நடந்த 19 வயதுக்குட்பட்டோருக்கான உலக கோப்பை தொடரில் இந்திய அணி கோப்பை வென்றது. தற்போது ஜார்கண்ட் ரஞ்சி கோப்பை கிரிக்கெட் அணியின் கப்டனாக உள்ள இவருக்கு கடந்த 2008 இல் இந்தியன் பிறிமியர் லீக் (ஐ.பி.எல்.) ருவென்டி-20 தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணி சார்பில் விளையாடும் வாய்ப்பு கிடைத்தது. ஆனால், இத்தொடரில் இவர் விளையாடும் லெவன் அணியில் அதிகம் வாய்ப்பு பெறவில்லை. இந்த ஆண்டு நடந்த மூன்றாவது ஐ.பி.எல். தொடரில் இவர் மும்பை அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கினார். இத்தொடரில் 16 போட்டியில் விளையாடிய இவர் 419 ஓட்டங்கள் எடுத்து அணியின் வெற்றிக்கு முக்கிய பங்குவகித்தார்.



இவரது திறமையான ஆட்டத்தின் காரணமாக சமீபத்தில் இலங்கையில் நடந்த ஆசிய கோப்பை மற்றும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கு தேர்வு செய்யப்பட்டார். ஆனால், இவருக்கு துரதிர்ஷ்டவசமாக விளையாடும் லெவன் அணியில் வாய்ப்பு கிடைக்கவில்லை.இத்தொடரில் தொடர்ந்து மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஒரு சில வீரர்களுக்கு தொடர்ந்து வாய்ப்பு அளிக்கப்பட்டது. இதன் மூலம் இவர் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் விளையாடும் லெவன் அணியில் முதல்வாய்ப்பை நோக்கி காத்திருக்கிறார்.

ஆசிய கோப்பையை இந்திய அணி கைப்பற்றியது. ஆனால், முத்தரப்பு தொடரில் இந்திய துடுப்பாட்ட வீரர்கள் போதுமான நம்பிக்கை அளிக்கவில்லை. இத்தொடரில் சேவாக் மட்டும் ஆறுதல் அளித்தார்.தினேஷ் கார்த்திக், சுரேஷ் ரெய்னா விராத் கோஹ்லி,ரோகித் சர்மா, யுவராஜ் சிங் உள்ளிட்டோர் ஏமாற்றியதால் இறுதியில் தோல்வி அடையநேரிட்டது. இதனால் வரும் காலங்களில் தேர்வு செய்யப்பட்ட அனைத்து வீரர்களுக்கும் சுழற்சி முறையில் வாய்ப்பு அளிக்கும் பட்சத்தில் இளம் வீரர்களின் திறமை வீணாகாமல் இருக்கும்.

# இதுவுமொரு விளையாட்டு

டில்லியில் பொது நலவாய அமைப்பு நாடுகளில் [கொமன் வெல்த்] விளையாட்டுப் போட்டிகள் ஒக்டோபர் 3 ஆம் திகதி தொடங்கி 14 ஆம் திகதி வரை நடக்கிறது. 72 நாடுகளைச் சேர்ந்த வீர வீராங்கனைகள் பங்கேற்கின்றனர். இந்தியாவில் இந்தப் போட்டியை நடத்துவதற்காக வெளிநாடுகளுக்குக் கோடிக் கணக்கில் லஞ்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது.






விளையாட்டு ஏற்பாடுகளில் ஏகப்பட்ட ஊழல் நடக்கிறது. போட்டி ஏற்பாடுகளில் மாநில காங்கிரஸ் ஆட்சி, பா.ஜ.வின் மாநகராட்சி நிர்வாகம் இரண்டும் போட்டி போட்டி சொதப்பல்கள்... என கொமன்வெல்த் பற்றி தொடர்ச்சியாக பரபரப்புச் செய்திகள் வந்த வண்ணமுள்ளன. இந்த வரிசையில் பிந்திய பரபரப்பு ஏற்படுத்தியிருப்பது டில்லியில் சூடுபிடித்துள்ள விபசாரம்.

2008 இல் ஒலிம்பிக் போட்டி சீன தலைநகர் பீஜிங்கில் நடந்தது. அப்போது இலட்சக்கணக்கில் ஆணுறைகள் விற்றுவிட்டதால் 'கொண்டம்' கம்பனிகள் கொள்ளை இலாபமீட்டின. அந்த நேரத்தில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அழகிகள் சீனாவில் குவிந்து செக்ஸ் தொழில் ஈடுபட்டதும் பரபரப்பாகப் பேசப்பட்டது.

வெளிநாடுகளில் செக்ஸ் வியாபாரத்துக்காகவே ஏகப்பட்ட முகவர்கள் இயங்குகின்றனர். உலகளவில் பிரபல்யம் வாய்ந்த விளையாட்டுப் போட்டிகள் பெரிய விழாக்கள் நடக்கும்போது கூட்டம் கூட்டமாய் அங்கு அழகிகளை இறக்கி இலாபம் சம்பாதிப்பது இவர்களது பிரதான தொழில்களில் ஒன்று.

தங்கள் பார்வையை இந்த 'மாமா' க்கள் இப்போது டில்லி கொமன்வெல்த் பக்கம் திருப்பியிருக்கின்றனர். ஆங்கில தொலைக்காட்சி சனல் ஒன்று இரகசியமாக நடத்திய ஆய்வில் இது தெரியவந்துள்ளது.

கொமன்வெல்த் போட்டிகளுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை வளைத்துப் போட 450 முதல் 500 புரோக்கர்கள் டில்லியைச் சுற்றிச் சுற்றி வருகின்றனராம். சிக்கிம், மணிப்பூர், பூட்டான் என்று லொத்தார் சீட்டு விற்பதுபோல இந்த புரோக்கர்கள் 'அமெரிக்கா, கனடா, ஆபிரிக்கா, இங்கிலாந்து, ஸ்பெயின், ரஷ்யா...' என்று கூவாத குறையாக வேலையில் இறங்கியுள்ளனர். கையில் பதினைந்து, இருபது பேரின் 'பயோடேட்டாக்களுடன்' உலா வருகின்றனராம்.

ஒரு புரோக்கர் மற்றும் தெற்கு டில்லியில் பல ஆண்டுகளாக செக்ஸ் தொழில் செய்துவரும் ரஷ்ய பெண் ஆகியோரிடமிருந்து இத் தகவல்கள் கிடைத்துள்ளன.

குறைந்த நாட்களில் அதிக பணம் சம்பாதிக்க ஆசைப்படும் இந்திய புரோக்கர்கள், வெளிநாட்டு முகவர்களைத் தொடர்பு கொள்கின்றனர். 10 நாள் குத்தகை அடிப்படையில் வெளிநாட்டு அழகிகளை 'புக்' செய்கின்றனர். இதில் ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு 'ரேட்'. அதிகம் வாங்குவது லண்டன் அழகிகளாம். 7 இலட்சம். ஸ்பெயின் அழகிகளுக்கு 6 இலட்சம் ரூபா துருக்கி அழகிகளுக்கு, 2 இலட்சம், ரஷ்ய அழகிகளுக்கு, 1 இலட்சம் ரூபா முதல் 2 இலட்சம் ரூபா வரை பேரம் பேசப்படுகிறது. இதில் 50 முதல் 60 வீதத் தொகை அழகிகளுக்குக் கிடைக்கும். மீதித் தொகை முகவர்களுக்கு போட்டி தொடங்க ஒரு மாதத்துக்கு மேலிருக்கும் நிலையில், சுற்றுலாப் பயணிகள் விசாவில் வெளிநாட்டு

விசாவில் கிளிகள் இப்போதே டில்லியை வட்டமடிக்கத் தொடங்கிவிட்டன என்கிறது புரோக்கர் வட்டாரங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுங்க வைக்கும் நடுவர்கள்




கிரிக்கெட் போட்டிகளைப் பொறுத்தவரை நடுவர்கள் அளிக்கும் தீர்ப்பு தான் இறுதியானது.கிரிக்கெட் ஆரம்பித்த காலம் முதல் இது தான் நடைமுறையில் இருந்து வருகிறது. ஆனால், நடுவர்கள் அளிக்கும் தீர்ப்பு 100 சதவீதம் சரியாக அமைவது இல்லை.ஒரு சில நேரங்களில் ஆட்டத்தின் போக்கையே மாற்றிவிடும் அளவுக்கு விபரீதத்தை ஏற்படுத்தி விடுகிறது.

சமீபத்தில் இலங்கையில் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடந்தது.இதில் இந்தியா,இலங்கை அணிகள் மோதிய ஒரு போட்டியில் இலங்கை நடுவர் தர்மசேனா 3 முறை தவறான தீர்ப்பு அளித்தார். தவிர இப்போட்டியில் மற்றொரு நடுவராக செயற்பட்ட பாகிஸ்தானின் அசாத்ராப் ஒருமுறை தவறான தீர்ப்பு அளித்தார். இவர்களின் தவறான கணிப்பால் முன்னணி இந்திய வீரர்களான சேவாக், தினேஷ் கார்த்திக், சுரேஷ் ரெய்னா, யுவராஜ் ஆகியோர் ஆட்டமிழந்தனர். இதனால் இப்போட்டியில் இந்திய அணி படுதோல்வி அடைய நேரிட்டது. ஐ.சி.சி. விதிமுறைகளின் ப்டி நடுவர் அளிக்கும் தவறான தீர்ப்புகளுக்கு பெரிய அளவில் எந்தத் தண்டனையும் இல்லை.

**யு.டி.ஆர்.எஸ்.முறை**

நடுவர்களின் தவறான தீர்ப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தவேண்டியது அவசியம்.அப்போது தான் கிரிக்கெட் மீதான ரசிகர்களின் ஈர்ப்பை நிலைநிறுத்தமுடியும்.இதன் முதற்கட்டமாகச் சர்வதேசக் கிரிக்கெட் கவுன்சில் [ஐ.சி.சி.] கடந்த 2008 நடுவர் தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து மறுபரீசிலனை செய்யும் முறையை [யு.டி.ஆர்.எஸ்.] அறிமுகம் செய்தது. அவ்வப்போது டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் பயன்படுத்தப்பட்டு வந்த யு.டி.ஆர்.எஸ். முறைக்கு கடந்த 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஐ.சி.சி. முழு அங்கீகாரம் அளித்தது. ஆனால், தற்போதும் பரிசோதனை முறையில் தான் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த முறையின் படி துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு செய்யும் அணிகள் தலா மூன்று முறை நடுவர் தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து மேன்முறையீடு செய்து கொள்ளலாம்.பின்னர் ரி.வி. நடுவர் மூலம் இறுதித் தீர்ப்பு வழங்கப்படும்.

**ஹொட் ஸ்பொட் முறை:**

இருப்பினும் பந்து பேட்டில் பட்டதா பாடில் பட்டதா என்பதை யு.டி.ஆர்.எஸ். முறையில் தெளிவாகக் கண்டறிய முடியவில்லை. இந்தத்தொழில்நுட்ப முறைக்கு இந்தியா மற்றும் இங்கிலாந்து கிரிக்கெட் சபைகள் ஆதரவு அளிக்கவில்லை.இதையடுத்து ஹொட் ஸ்பொட் என்ற புதிய முறையை ஐ.சி.சி. அறிமுகப்படுத்தி உள்ளது. இது மிகவும் துல்லியமாகத் தவறுகளைக் கண்டறிய உதவுகிறது. இதற்கு 2 இன்பிராரெட் கேமராக்கள் பயன்படுத்தப்படும். இதில் இருந்து கணினி மூலம் நெகடிவ் இமேஜ் பெறப்படும்.இதன் மூலம் பந்து பேட்டில் பட்டதா அல்லது பாடில் பட்டதா என்பதை வீடியோ நெகடிவ் மூலம் தெளிவாகக் கண்டறிய முடியும். இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகள் பெரும்பாலும் இந்த முறையைப் பயன்படுத்தி வருகின்றன.

**தொழில் நுட்பம் அவசியம்:**

அடுத்த ஆண்டு இந்திய துணைக் கண்டத்தில் உலக்கோப்பை [50 ஓவர்] கிரிக்கெட் தொடர் நடக்க உள்ளது. முக்கியமான இத்தொடரில் நடுவர்களின் தவறான தீர்ப்பு தொடரக்கூடாது என்பதில் ஐ.சி.சி. உறுதியாக உள்ளது. அதனால் யு.டி.ஆர்.எஸ்.முறையைப் பயன்படுத்த முடிவு செய்துள்ளது. ஆனால்,இதற்கு பி.சி.சி.ஐ.எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. அதே சமயம் ஹொட் ஸ்பொட் முறைக்கு வரவேற்பு அளித்துள்ளது. இந்திய மாஸ்டர் பேட்ஸ்மேன் சச்சினும் ஹொட் ஸ்பொட் முறைக்கு ஆதரவு தெரிவித்துள்ளார். உலகைக்கோப்பை தொடரின் காலிறுதி, அரையிறுதி, இறுதி போட்டிகளில் இந்த முறை பயன்படுத்தப்பட அதிக வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் நடுவர்களின் மோசமான தீர்ப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்.

# அதிகம் எதிர்பார்க்கும் சச்சின்



இந்தியாவில் ஆதரவற்ற குழந்தைகளின் முன்னேற்றத்துக்காக பல தனியார் அமைப்புகள் இணைந்து செயற்படுகிறது.இவர்கள் இணைந்து எதிர்வரும் 26 முதல் அக்.2 வரை கொடுத்து மகிழுங்கள் என்ற தேசிய இயக்கம் மூலம் பெருமளவு உதவியை திரட்ட உள்ளனர். இதன் தூதராக தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக இந்திய கிரிக்கெட்டின் மாஸ்டர் பேட்ஸ்மேன் சச்சின் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 1989 நவ. 15 ஆம் திகதி சச்சின் இந்திய அணியில் அறிமுகமானார். தொடர்ந்து அசத்தல் பேட்ஸ்மேனாக நீடித்து மாஸ்டர் பேட்ஸ்மேனாக உருவெடுத்த இவர் எண்ணற்ற சாதனைகளுக்கு சொந்தக்காரர். தனிப்பட்ட முறையில் 200 குழந்தைகளின் கல்வி மற்றும் வளர்ச்சிக்கும் இவர் உதவி வருகிறார். இதுதவிர கடந்த ஆண்டு கொடுத்து மகிழுங்கள் என்ற தேசிய அமைப்புடன் இணைந்தும் பெருமளவு உதவிகள் குவிய வழிவகுத்தார். தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக இதன் தூதராக நியமிக்கப்பட்ட சச்சின் இது குறித்து கூறியதாவது;

கடந்த ஆண்டு இந்நிகழ்ச்சிக்காக நான் கிரிக்கெட் முகாம் நடத்தினேன். இதில் என்னுடன் நேரத்தை செலவிட அதிக அளவில் ஏலம் கேட்ட 25 முதல் 30 பேர் பங்கேற்றனர். இதில் பாதி இளைஞர்கள், பாதி வயதானவர்கள் அவர்களுடன் எனது கருத்தைப் பகிர்ந்து கொண்டேன். துடுப்பாட்டத்தின் போது எதிர் முனையில் (22 மீ. தொலைவு) இருந்து 137 கி.மீ. வேகம் முதல் பல வேகங்களில் வரும் பந்தை எதிர்கொள்வது குறித்து கூறினேன். ஆனால் அவர்கள் அதை நம்பவில்லை.மொத்தத்தில் இந்த முகாம் எல்லோருக்கும் மகிழ்ச்சி தருவதாக இருந்தது. ஆனால், இதை மிகைப்படுத்திவிட்டனர்.

இந்த ஆண்டு தான் என்ன செய்வது எனத்தெரியவில்லை. ஏனெனில் விரைவில் உலகக் கோப்பை உட்பட பல தொடர்கள் வரவுள்ளது. இதனால் நேரம் கிடைப்பது கடினம்.இருப்பினும் மக்கள் பலரும் என்னுடன் நேரத்தை செலவிட ஆர்வமாக உள்ளனர். அவர்களுடன் கிரிக்கெட்டை பகிர்ந்து கொள்ள மீண்டும் சிறிய அளவில் முகாம் நடத்த உள்ளேன்.

ஆனால்,இம்முறை அதிக அளவில் தொகையை எதிர்பார்க்கிறேன். அதாவது என்னுடன் நேரம் செலவிட விரும்புபவர்கள் அதிக அளவில் ஏலம் கேட்க வேண்டும்.ஏனெனில் இந்த ஆண்டு அதிகபட்ச இலக்கு வைத்துள்ளோம். இந்த நிகழ்ச்சிக்கு இந்தியா முழுவதிலும் உள்ளவர்கள் உதவ வேண்டும். அப்போது எங்களால் பெரிய இலக்கை அடைய முடியும்.

இந்நிகழ்ச்சி மூலம் நமது மக்களுக்கு உதவ உங்களுக்கு நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வளவு தான் தரவேண்டும் என்று யாரையும் சொல்ல மாட்டேன். ஒரு இலட்சம் ஆயிரம் நூறு அல்லது ஐம்பது ரூபாய் என உங்களால் முடிந்த அளவுக்கு நன்கொடை கொடுத்து உதவுங்கள்.இதனால் உதவி பெறுபவர்கள் முகத்தில் புன்னகையைக் காணலாம். இது எனக்கு மட்டுமல்ல உங்களுக்கும் மிகப்பெரிய மகிழ்ச்சியை தரும்.

கிரிக்கெட்டின் மீது தீவிர ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகிறேன். எனது பாடசாலை நாட்களில் இருந்து இப்போது வரை கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருக்கிறேன்.தவிர இந்திய அணிக்காக விளையாட வேண்டும் என்ற கனவும் நிறைவேறியது. மீதமுள்ள நேரங்களில் இதுபோன்ற வளர்ச்சிப் பணிகளுக்கு உதவுவது மகிழ்ச்சி தான்.

இதேபோல மைதானத்தில் என்னைப்பாராட்டி எனது பெயரை உச்சரிக்கும் போதும் மகிழ்ச்சி ஏற்படும். இதை விபரிப்பது என்பது மிகவும் கடினமானது.இதுபோன்ற செயல்கள் தான் கிரிக்கெட் வீரரின் வளர்ச்சிக்கு உதவும்.அவர்களை எப்போதும் சிறப்பாக சாதிக்கத் தூண்டும்.

கிரிக்கெட்டில் இருந்து இப்போதைக்கு ஓய்வு பெறும் எண்ணமில்லை. ஒருவேளை அப்படி ஒரு திட்டம் இருந்தால் உங்கள் அனைவருக்கும் தெரியப்படுத்துவேன். தற்போதைக்கு கிரிக்கெட்டில் ஆர்வத்துடன் பங்கேற்று வருகிறேன்.மற்றப்படி வேறு எந்த எண்ணமும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈராக் போர்

## அதிகளவு விலை செலுத்தியது அமெரிக்கரா? ஈராக்கியரா?

உலக வலம்

ச.துஷ்யந்தினி

போர்-உயிர், பொருள் அழிவை மட்டுமல்லாது உயிர் பிழைத்தவர்களிடையில் மீண்டெழ முடியாத நீண்டகால தாக்கங்களையும் ஏற்படுத்துகிறது.

ஒரு போரினால் ஏற்படும் உடனடி இழப்புகளும் தாக்கங்களும் தான் பெரிதாகப் பேசப்படுகிறதே தவிர போர் முடிவடைந்த பின்னர் பாதிக்கப்பட்ட சமூகத்தில் ஒவ்வொன்றாய் தலைதூக்கும் பிரச்சினைகளுக்கு அச் சமூகம் வடிக்கும் கண்ணீர் மட்டுமே வடிகாலாகி விடுகிறது.

போர் ஏற்படுத்திய உடனடித் தாக்கங்களை விட அது ஏற்படுத்தும் நீண்டகாலத் தாக்கங்களிலிருந்து மீண்டெழ முடியாமல் மக்கள் தவித்து வருவதைப் போரினால் நாசமாக்கப்பட்ட உலகின் ஒவ்வொரு பகுதியிலும் காண முடியும்.

ஈராக்கில் படை நடவடிக்கைகள் முடிவுக்கு வந்துவிட்டதாகக் கடந்த வாரம் உத்தியோகபூர்வமாக அறிவித்த அமெரிக்கா நாட்டின் எதிர்காலத்தை ஈராக்கியர்களிடம் ஒப்படைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

பேரழிவு ஆயுதங்களை ஈராக் மறைத்து வைத்திருக்கிறது என்ற பொய்யான குற்றச்சாட்டின் பேரில் ஏழு வருடங்களுக்கு முன்னர் ஈராக்கை ஆக்கிரமித்த வல்லரசு நாடுகள் அங்கு ஓடிய இரத்த ஆறில் தமது தாகத்தைத் தணித்த பின்னர் முன்னரை விடவும் வன்முறைகள் தீவிரமடைந்துள்ள ஸ்திரமற்ற ஒரு நிலையில் அங்கு படை நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளன.

பொய்யான குற்றச்சாட்டின் அடிப்படையில் அமெரிக்காவும் பிரிட்டனும் ஈராக் மீது போர் தொடுத்ததும் சர்வாதிகாரி சதாம் ஹுசைன் உள்ளிட்ட நாட்டின் தலைவர்களைச் சிறைப்பிடித்து தூக்கிலிட்டதும் ஏழு வருட காலப் போரில் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் காவுகொள்ளப்பட்டு பல இலட்சக்கணக்கானவர்கள் ஊனமாக்கப்பட்டதும் போரின் உடனடித் தாக்கங்கள் என்பதுடன் வல்லரசுகளினால் பெருமையுடன் உலகுக்குக் கூறப்பட்டவையுமாகும்.

ஆனால், போரின் பின்னர் அச் சமூகம் எதிர்நோக்கும் நீண்டகாலப் பிரச்சினைகள் மீது எவரது கவனமும் பெரிதாக ஈர்க்கப்படவில்லை.

தமது குடும்பத்திலுள்ள 30 வயதைக் கடந்த ஆறு சகோதரிகளில் தற்போது ஒருவர் மட்டுமே திருமணம் முடித்திருப்பதாகக் கூறும் ஈராக்கியப் பெண்ணொருவர் துணையொன்றைக் கண்டுபிடிப்பதற்கு தமக்கிருக்கும் வாய்ப்புகள் மிகவும் அரிதாகி வருவதாகக் கூறுகிறார்.

30 வயதைக் கடந்த பின்னரும் துணையொன்று இல்லாது தனித்து வாழும் பெண்களின் தொகை அதிகரித்து வருவது போருக்குப் பின்னரான ஈராக்கில் எழுந்துள்ள ஆழமான சமூகப் பிரச்சினைகளில் ஒன்றாக விளங்குகிறது.

போரில் இளைஞர்கள் அதிகளவுக்கு இலக்கு வைக்கப்பட்டமையே திருமண பந்தம் நெருக்கடிக்குள்ளாவதற்கான பிரதான காரணமாக விளங்குவதுடன் சமூக வலையமைப்பிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பழைமைவாதக் கொள்கைகளைக் கொண்ட ஈராக்கிய சமூகத்தில் பெண்கள் பருவ வயதிலோ [13 தொடக்கம் 19 வயதுவரை] அல்லது 20 வயதின் முற்பகுதிக்குள்ளோ திருமண பந்தத்தில் இணைவது அவசியமாகக் கருதப்படுகிறது.

ஆனால், தற்போது 30 வயதைக் கடந்த பின்னரும் பெண்கள் தனித்து வாழ்வது சமூகக் கட்டமைப்பில் கறைபடிந்த அத்தியாயங்கள் உருவாவதற்கு வழிவகுத்துள்ளது.

பெற்றோருடனோ அல்லது ஏனைய குடும்பத்தவருடனோ வாழவேண்டிய நிர்ப்பந்தத்தை எதிர்நோக்கும் இப் பெண்கள் போதிய பணபலத்தையோ அல்லது கல்வியறிவையோ கொண்டிருக்காத பட்சத்தில் உறவினர்களால் வேலைவாங்கப்படுவதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

வேலை வாய்ப்புகள் இவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டு இருக்கும் நிலையில் திருமணமாகாத இப் பெண்களுக்குக் கணவனின் பாதுகாப்புக் கிடைக்காமையால் வேலை பார்க்கும் இடங்களிலும் பொது இடங்களிலும் பல்வேறு வகையான தொந்தரவுகளையும் அபாயங்களையும் எதிர்கொள்கின்றனர்.

1980 களில் இடம்பெற்ற ஈரான்-ஈராக் போரிலும் அதிகளவான இளவயதினர் கொல்லப்பட்ட போதும் 2003 இன் பின்னரே 30 வயதுக்கு மேல் தனித்துவாழும் பெண்களின் தொகை சடுதியாக அதிகரித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மோதல்கள் மற்றும் வன்முறைகளில் பலியான இலட்சக்கணக்கான இளைஞர்களின் எண்ணிக்கை ஒருபுறமும் மோதல்களுக்கு அஞ்சி நாட்டைவிட்டு வெளியேறி இளைஞர்களின் எண்ணிக்கை மறுபுறமுமாக ஈராக்கிய சமூகங்களில் இளைஞர்களின் எண்ணிக்கையில் மிகப்பெரிய தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இதுதவிர தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள், மத வன்முறைகள் மற்றும் துப்பாக்கிச் சண்டைகள் என்பன திருமணம் போன்ற சமூகங்களை ஒன்றிணைக்கும் நிகழ்வுகளுக்கு இடையூறுகளை விளைவித்துள்ளன.

வீடுகளை விட்டு வெளியேறுவதற்கு மக்கள் அஞ்சுவதால் தமது துணையைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்புகளை இளவயதினர் இழக்க நேரிடுகிறது.

அத்துடன் உறவினர் வீடுகளுக்குச் சென்று வருதல் இளைஞர்கள் தமது எதிர்காலத் துணைகளைச் சந்திப்பதற்கான ஒரு பாரம்பரிய வாய்ப்பாகக் கருதப்படும் நிலையில் வன்முறைகளின் தீவிரம் காரணமாக உறவினர் வீடுகளுக்குச் சென்று வருதலும் தற்போது அரிதாகியுள்ளது.

மேலும் ஷியா-சன்னி பிரிவுகளுக்கிடையிலான மோதல்கள் இவ்விரு சமூகங்களுக்குமிடையிலான திருமணங்கள் பெருமளவில் குறைவதற்கு வழிவகுத்துள்ளன.

இவை தவிர வீடு வாங்குதல் அல்லது வாடகை செலுத்துதல் மற்றும் வீட்டுத் தளபாடக் கொள்வனவு என்பவற்றுக்காகப் பாரம்பரிய ரீதியில் திருமணத்திற்காக இளைஞர்களால் செலுத்தப்படவேண்டிய பெரிய தொகையைப் பொருளாதார நெருக்கடி காரணமாக இளைஞர்களால் செலுத்த முடியாமல் இருப்பதும் திருமணங்கள் குறைவடைந்தமைக்கான காரணங்களில் ஒன்றாகும்.

இந்நிலையில் போரினால் விதவைகளான இலட்சக்கணக்கான [illegible] நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரசாங்கம் திருமணமாகாத பெண்களின் பிரச்சினை தொடர்பில் மிகக் குறைவாகவே கவனம் செலுத்துவதாக அரசசார்பற்ற பெண்கள் அமைப்பொன்றின் தலைவர் தெரிவித்துள்ளார்.

வேலைபார்க்கும் இடங்களிலும் வீட்டிலும் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்கும் இப் பெண்களைக் குடும்ப உறுப்பினர்கள் கூட சுயநலத்திற்காகப் பயன்படுத்துவதாக அவர் குற்றஞ்சாட்டுகிறார்.

இதற்கிடையில் இவ்வாறான பெண்களைத் திருமணம் செய்வதற்கு அல்லது இரண்டாவது மனைவியாக ஏற்றுக்கொள்வதற்கு [இஸ்லாமிய சட்டத்தின் பிரகாரம்] ஆண்களை ஊக்குவிக்கும் வழிமுறைகள் குறித்து பெண்கள் அமைப்புகள் விவாதித்து வருகின்றன.

35 வயதுக்கு மேற்பட்ட பெண்களைத் திருமணம் செய்ய முன்வருபவர்களுக்கு அரசாங்கம் குறிப்பிட்ட தொகைப் பணத்தை வழங்குவதற்கான பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ள போதும் இது பெண்களுக்கு ஆபத்தாக அமையுமெனக் கூறி பெண்கள் நல அமைப்புகள் இதனை எதிர்த்துள்ளன.

திருமணமாகாத பெண்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான உண்மையான வழி பாதுகாப்பை உறுதிப்படுத்தி பொருளாதார மீட்சியை ஏற்படுத்துவதுடன் வேலை வாய்ப்பின்மையைக் குறைப்பதுமாகுமெனப் பெண்கள் நல ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை ஈராக் போரினால் உயிரிழந்தவர்கள் தொகை ஒரு இலட்சத்திற்கும் அதிகமென உத்தியோகபூர்வ தரவுகள் தெரிவிக்கும் அதேவேளை இத்தொகை ஆறரை இலட்சத்திற்கும் அதிகமெனத் தனியார் அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

இதனைவிடப் போரில் காயமடைந்த உடல் ஊனமுற்ற நிலையிலும் சூனியமான எதிர்காலத்துடனும் வாழுவோர் பல இலட்சம் பேர்.

போரினால் மதிப்பிட முடியாதளவுக்கு அழிவுகளை எதிர்கொண்ட ஈராக் அதனால் ஏற்பட்ட நேரடி மற்றும் மறைமுகத் தாக்கங்களிலிருந்து மீள முடியாமல் திணறிக் கொண்டிருக்கும் நிலையில் படை நடவடிக்கைகளைக் கடந்த ஆகஸ்ட் 31 ஆம் திகதியுடன் முடிவுக்குக் கொண்டு வந்திருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் இதுகுறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட்ட அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஈராக்கில் படை நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவந்திருப்பதாகவும் நாட்டின் எதிர்காலத்தை ஈராக்கியர்களிடம் ஒப்படைப்பதற்கு அமெரிக்கா அதிக விலையைச் செலுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டின் வரவு-செலவுத் திட்டம் நெருக்கடிக்குள்ளான தருணத்திலும் தாம் போரைக் கொண்டு நடத்தியதாகக் குறிப்பிட்டுள்ள ஒபாமா தமது அதிகளவிலான வளங்களை அங்கு செலவிட்டதாகவும் ஈராக்கில் அமெரிக்க இளைஞர்கள், யுவதிகள் புரிந்த தியாகம் தன்னை மெய்சிலிர்க்க வைப்பதாகவும் கூறியுள்ளார்.

பொய்யானதொரு குற்றச்சாட்டின் பேரில் ஒரு நாட்டை ஆக்கிரமித்து அதனை சின்னாபின்னமாக்கி அந் நாட்டு மக்களின் எதிர்காலத்தையே சூனியமாக்கிவிட்டு ஈராக்கின் எதிர்காலத்திற்காக அதிகளவு விலையைச் செலுத்தியிருப்பதாகக் கூறுவதை எவ்வாறு வர்ணிப்பது?

போர் பெருமளவில் இளைஞர்களையே பலிகொண்டாலும் அதற்கு மேலான தாக்கங்களையும் துயரங்களையும் போர் இடம்பெற்ற பகுதிகளிலுள்ள பெண்களே அனுபவிக்கின்றனர்.

ஈராக்கின் தற்போதைய நிலைமையைப் போன்றே எமது சமூகம் உட்பட போரைச் சந்தித்த ஒவ்வொரு சமூகமும் அவலத்தில் துடித்துக்கொண்டிருக்கிறது. ஆனால், போர் மட்டும் வீறுநடை போட்டுக்கொண்டே இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை தினக்குரல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு 15, எலி ஹவுஸ் ரோட், 68ஆம் இலக்கத்தில் 2010 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.